

# திருக்கோயில்

டிசம்பர் 1988 விலை ரூ. 3















குடந்தையில் 29-10-88 அன்று ஆலயங்கள் மேம்பாட்டுத் திட்ட நிதி உதவி வழங்கும் விழா நடைபெற்றது. தமிழக அரசின் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ்., அவர்கள் நிதி உதவிகளை வழங்கிச் சிறப்புரையாற்றினார். அறநிலையத்துறையின் ஆணையாளர் திரு வ. இராமதாஸ், ஐ.ஏ.எஸ்., தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மச்சேந்திரநாதன், ஐ.ஏ.எஸ்., இணை ஆணையாளர் திரு இரா. தண்டபாணி, பி.எஸ்.சி., பி.எல்., ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

முகப்பு

சுவாமிமலை

அருள்மிகு சுவாமிநாத சுவாமி

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.

தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்: கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மலர் | திருவள்ளுவர் ஆண்டு 2019 விபவ ஆண்டு மார்கழித் திங்கள் | மணி : |
|---|---|---|
| 30 | டிசம்பர் 1988 விலை ரூ 3-00 | 12 |

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்.

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

உயர்திரு ஆணையர் அவர்கள்
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-600 034.

என்ற முகவரிக்கு மணியார்டர் அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| அரை ஆண்டு | — ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — ரூ. | 36-00 |
| ஆயுள் | — ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

## பொருளடக்கம்

குடந்தையில் நடைபெற்ற ஆலய மேம்பாட்டுத் திட்ட நிதிவழங்கு விழா
—அருட்செல்வி

கந்தவேள் கருணை
—திருமுருககிருபானந்தவாரியார்

புதுப்பட்டி மாரியம்மன்
—புலவர் ச சோமசுந்தரம் எம்.ஏ;பிஎட்.

வல்லக்கோட்டையில் நான் கண்டமுருகன்
—எம்.வி. அரங்கநாதன்.

சித்திர பாரதம்
—செவ்வேள்

அகிலத்தைத் திருத்தவந்த அவதாரங்கள்
—புலவர் வ.ஞானப்பிரகாசம்

மீனாட்சி ஊட்டுகிறாள்
—டாக்டர் சுத்தானந்தபாரதியார்


அருள்மிகு பாரத்வாஜேசுவரர் ஆலயம்
—எஸ். சௌந்தரராஜன் எம்ஏ;பிஎட்

மணிவாசகரின் திருவெம்பாவை
— வித்யாதீர்த்ததாசன்

திருப்பாவை பாடிய திருப்பாவை
—வே. தியாகராஜன்

கம்பரின் இராமாவதாரம்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

# குடந்தையில் நடைபெற்ற ஆலயங்கள் மேம்பாட்டு நிதி வழங்கு விழா



கும்பகோணம் அருள்மிகு நாகேஸ்வரசுவாமி ஆலயத் திருமணக்கூடத்தில் ஆலயப் பணியாளர்களுக்கு நிதி உதவி மற்றும் கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணிக்கு நிதி உதவி வழங்கும விழா 29 10.88 அன்று காலை 10.30 மணி அள விற்குத் தொடங்கி நடைபெற்றது. அறநிலையத் துறையின் இணை ஆணையாளர் திரு இரா. தண்ட பாணி, பி.எஸ்சி,. பி.எல்., அவர்கள் விழாவிற்கு வருகை தந்த சான்றோர்களை வரவேற்றார். அற நிலையத்துறை ஆணையாளர் திரு. வ. இராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் விழாவிற்கு தலைமை வகித்தார்கள். தமிழக அரசின் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு கு. ஆளுடையபிள்ளை ஐ.ஏ.எஸ் அவர்கள் நிதி உதவி வழங்கிப் பேருரை ஆற்றினார்கள். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சு. மச்சேந்திரநாதன் ஐ.ஏ.எஸ். அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழா, மயிலாடுதுறை துணை ஆணையர் திரு வாசகபெருமாள் பி.காம்., பி.எல்., நன்றி கூற இனிதே நிறைவு பெற்றது. திருக்கோயில்களின் மேம்பாட்டிற்கு அற நிலையத்துறை நடத்திய இவ்விழாவின் தொகுப்பினைத் திருக்கோயில் வாசகர்களுக்காக வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

## இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திரு வ. இராமதாஸ், ஐ.ஏ.எஸ். அவர்கள் ஆற்றிய தலைமையுரை

திருக்கோயில்களின் நிர்வாகங்களையும் மற்ற நிர்வாகங்களையும் பார்த்து வருகின்ற அன்பிற்குரிய அலுவலக நண்பர்களே, பல்வேறு துறைகளைச் சேர்ந்த இங்கே பணியாற்றி வருகின்ற மதிப்பிற்குரிய அன்பர்களே, இங்கே திரளாக குழுமி இருக்கின்ற பெருமைக்குரிய சான்றோர்களே, தாய்மார்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கங்களை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழக அரசு நமது திருக்கோயில்களிலே பணியாற்றுகின்ற அன்பர்கள், ஊழியர்கள், அனைவரும் திருக்கோயில்களிலே வருமானம் குறைவாக இருக்கின்ற நிலையிலும் அவர்களுக்கு அரசால் ஆன உதவியை செய்ய வேண்டும் என்று ஒரு சீரிய எண்ணம் கொண்டு இத் திட்டத்தை உருவாக்கி உள்ளது. அதாவது திருக்கோயில்களிலே பணி புரிகின்ற அன்பர்களுக்கு அந்த திருக்கோயில்களில் வருமானம் குறைந்திருககின்ற காரணத்தினாலே அவர்களுக்கு கிடைக்கக் கூடிய ஊதியம் கொடுக்க முடியாத நிலையிலே பல கோயில்கள் இன்றைக்கு தமிழகம் முழுவதும் இருந்து வருகின்றன. பல மாதங்களாக அவர்களுக்கு ஊதியம் கொடுக்க முடியாமல் அவர்களுடைய குடும்பம் என்னநிலையிலே இருக்கும் என்பதை நாம் நிச்சயமாக உணர முடியும். அந்தமாபெரும் திட்டத்தின் பயனாக இதுவரையிலே 1985ம் ஆண்டு தொடங்கி 1985லே 145 ஆலயங்களிலே பணிபுரிகின்ற அன்பர்களுக்கு 5.6 லட்சம் ரூபாயும், 86ம் ஆணடு 9.78 லட்சம் ரூபாயும் இதுவரை வழங்கப்பட்டிருக்கிறது. 1987ம் ஆண்டு ஆலயங்களிலே பணிபுரிகின்ற 2453 பணியாளர்களுக்கு 13.87 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. அந்த திட்டத்தினை தொடங்கி இன்றைக்கு 30.6.88 முடிய அவர்களுக்கு இருக்கின்ற சம்பள பாக்கியிலே 50% அதாவது 28.47 லட்சம் இன்றைக்கு வழங்குகிறோம். அந்தப் பணியினை நமது ஆணையர் செயலர் அவர்கள் இப்பொழுது நிறைவேற்றிக் கொடுப்பார்கள்.

மற்றொரு திட்டம் ஆலயங்களில் பணி புரிகின்ற அன்பர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியவில்லை. அவர்களுக்கு வேண்டிய ஊதியத்தை கொடுப்பது முதல் திட்டம். இரண்டாவது திட்டம், அது மிகவும் முக்கியமான ஒரு திட்டம். வானளாவ உயர்ந்திருக்கும் கோபுரங்களுடன் கூடிய ஏராளமான ஆலயங்களிலே இன்னும் ஒரு கால பூஜைக்குக் கூட வழி இல்லாமல் இருக்கின்ற ஒரு பரிதாப நிலை நம நெஞ்சை எல்லாம் உருக்குகின்ற அந்தநிலையை நாம் மாற்ற வேண்டும். ஒரு காலமாவது ஆலயங்களிலே அந்த பூஜை நடைபெற வேண்டுமென்ற அந்த ஒரு சிறு கருத்து உருவாகி அதனை செயல்படுத்துகின்ற போதுதான், 1985லே இருந்து இது நாள்வரை சுமார் 90.47 லட்சம் அரசு வழங்கி இருக்கின்றது. அந்த திட்டத்தினைத் தொடர்ந்து இன்றைக்கு ஆலயங்களிலே ஒரு கால பூஜையாவது நிச்சயம் நடத்த வேண்டுமென்று, ஒரு ஆண்டுக்கு ரூ. 2,500 ஒவ்வொரு கோயிலுக்கும் கொடுத்து அங்கே ஒரு கால பூஜையாவது நிச்சயம் நடத்த வேண்டும் என்ற ஒரு கருத்தின் அடிப்படையிலே இன்றைக்கு 26.34 லட்சம் வழங்குகின்றோம். ஆக மொத்தம் சுமார் 55 லட்சம் ரூபாய் இன்றைக்கு திருக்கோயில்பூஜை நடத்துவதற்காகவும் அங்கே பணியாற்றுகின்ற அன்பர்களுக்கு 50% அளவுக்காவது சம்பள பாக்கி கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையிலும் இன்றைக்கு வழங்குகின்றோம். இதை வழங்குவதற்கு சென்னையிலுள்ள நமது ஆணையர் செயலர் அவர்கள் வந்திருக்கின்றார்கள். அவர்கள் இங்கே வழங்குவார்கள்.

குறிப்பாக தஞ்சைமாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் மன்னர்கள் ஜமீன்தார்கள் என்று பலர் பரம்பரை பரம்பரையாகவே தாராளமாக பொன்னும், பொருளும் கொடுத்து உதவி இருக்கின்றார்கள். ஏராளமான நிலங்களை நன்கொடையாக வழங்கி இருக்கிறார்கள். இந்நாட்டை ஆண்ட அத்தனை மன்னர்களும் அங்கே தங்களால் இயன்ற அளவுக்கு திருக்கோயில்களை ஏற்படுத்தி அதற்கு மானியங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். பல்

வேறு சமய மடங்களை நிர்வகித்து வருகின்ற பெரிய அன்பர்களும் அதற்கு வேண்டிய நிலங்கள் கட்டிடங்கள், பொருள்கள், எல்லாம் உதவி செய்து இருக்கின்றார்கள்; கைங்கரியத்தை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். இப்படி இருப்பினும் ஒரு கால பூஜைக்குகூட வழியில்லை என்று சொன்னால் அது நம்மை நாமே இழிவு படுத்திக் கொள்ளக் கூடிய ஒரு நிலையாகக் கருதவேண்டியிருக்கின்றது.



ஆணையாளர் திரு. வ. இராமதாஸ், ஐ.ஏ.எஸ்., உரையாற்றுகிறார்.

ஒவ்வொரு கோயிலும் நல்ல முறையிலே பூஜை நடைபெற்று வருகின்ற பக்தர்களுக்கெல்லாம் மனம் குளிரும்படியான அந்த ஒரு சூழ்நிலை பல கோயில்களிலே தமிழகத்தில் இருக்க வேண்டும் என்பதை நாம் நோக்குவோமானால் எந்த ஒரு காரியத்திற்காக அந்த கோயிலுக்கு மானியம் வழங்கப்பட்டதோ, நிலம் வழங்கப்பட்டதோ, பொருள்கள் வழங்கப்பட்டதோ, கைங்கரிய காரியங்கள் ஏற்படுத்தப்பட்டதோ, அது ஏதோ ஒரு சூழ்நிலையினால் ஏதோ ஒரு காரணத்தினால் அது அங்கே தடைப்பட்டிருக்கின்றது. அந்தத் தடையினை நிவர்த்திக்க இன்றைய கால கட்டத்திலே நாம் ஒவ்வொருவரும் நிச்சயமாக அதை உணர்ந்து, அறிந்து தெரிந்து செயல்படக் கூடிய ஒரு சூழ்நிலையில் நாம் இருக்கின்றோம். நிச்சயமாக அன்றைக்கு ஏற்படுத்தப்பட்ட அந்த அறக்கட்டளைகள் அனைத்தும் எந்த காரியத்திற்காக ஏற்படுத்தப்பட்டதோ அதை நிச்சயமாக நாம் செயல்படுத்த வேண்டும்.

இந்த தஞ்சை மாவட்டத்திலே ஏராளமான நிலங்கள் திருக்கோயிலுக்கு சொந்தமாக இருக்கின்றன. வறட்சி ஏற்பட்டு இயற்கை பொய்த்து இருக்கிறது என்று சொன்னாலும் அதற்கு எவ்வளவு தேவையோ அதை நாம் குறைத்துக் கொள்ளலாம். அதிலே யாருக்கும் சங்கடம் இல்லை. இருப்பினும் பல ஆண்டுகளாக அந்த குத்தகை பாக்கி - பணமாகவும், பொருளாகவும் கொடுக்கப் படவேண்டிய குத்தகை பாக்கி ஏராளமாக நின்று இருக்கிறது. ஒரு குறிப்பை மட்டும் நான் சொல்லுகின்றேன். இந்த மாநிலத்திலே நிலங்கள் மூலமாக குத்தகை பாக்கி பணமாகவோ பொருளாகவோ வரவேண்டிய பாக்கி மட்டும் 35 கோடி ரூபாய் இருக்கின்றது. இப்படி ஒரு நிலைமையை நாம் ஒரு பக்கம் வளர்த்துக் கொண்டு இன்னொரு பக்கம் ஒரு கால பூஜைக்கு அரசு பெரிய கோயில்களிலே-வருமான்ம் அதிகம் இருக்கின்ற கோயில்களிலே இருந்து ஒரு பொது நிதியை திரட்டி இவர்களுக்கு வழங்க வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கெல்லாம் நாம்தாம் நம்மை நாம் சிந்தித்து அந்த கட்டளையை நிர்வகிக்கின்ற நிர்வாகிகள், அந்த நிலங்களை உழுகின்ற உழவர்கள், அவர்களை எல்லாம் அவர்கள் ஒவ்வொருவருடைய பாதத்தை நான் தொட்டுக் கேட்டுக் கொள்கின்றேன். மனசாட்சிக்கு விரோதமில்லாமல் இயற்கை பொய்த்தால் அப்பொழுது யாரும் வற்புறுத்தப் போவதில்லை. வருகின்ற வருமானத்திலே ஓர் அளவுக்காவது அவர்கள் அந்த திருக்கோயிலுக்கு செலுத்துவார்களேயானால் இந்த உலகத்திற்கும் அவர்கள் வணங்குகின்ற அந்தத் தெய்வத்திறகும் இதை விட ஒரு பெரிய நல்ல காரியம ஒரு பண்புள்ள ஒரு அறம், தர்மம் தழைக்க அவர்கள் செய்கின்ற ஒரு காரியம் வேறு எதுவும் இருக்க முடியாது என்று நான் சொல்லுகின்றேன். ஆகவே இந்ததிருக்கோயில்களுடைய நிலங்களையும் கட்டிடங்களையும், பொருள்களையும் நிர்வகிக்கின்ற அன்பர்களை அந்த நிலங்களை பயன்படுத்துபவர்களை எல்லாம் நான் மன்றாடி இந்த நேரத்திலே அழுத்தமாக ஆணித்தரமாக கேட்டுக்கொள்வது வேணடிக் கொள்வது என்னவென்றால் இந்த நிலையை உணர்ந்து நீங்களாகவே முன் வந்து ஓரளவுக்காவது அந்த திருக்கோயில்களுக்கு சேரவேண்டிய பாக்கியை செலுத்தினால் நீங்கள் இந்த திருக்கோயில்களில் பூஜை செய்ய ஒரு பெரிய நன்மை செய்தவர்களாக ஆவீர்கள் என்ற அந்த ஒரு விருப்பத்தை வேண்டுகோளை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன். அதே போல இந்த துறையிலே பணியாற்றுகின்ற அன்பர்களும் ஏதோ இயற்கை பொய்த்து விடுவது போன்ற பல சூழ்நிலைகள் இருக்கின்றன. நாம் எப்படி அவர்களை போய் அணுகுவது என்ற ஒரு அச்சத்தை கைவிட்டு இறைவனுடைய பணியை நாம் செய்கின்றோம் என்ற ஒரு கருத்தை-அந்த ஒரு தன்மையை உள்ளத்திலே நினைத்து அவர்களை எல்லாம், அணுகி அணுகுமுறை மாறாமல் அணுகி ,அவர்களுககு இந்த நிலைமைகளை எல்லாம் எடுத்துக்கூறி அவர்களைத் தன்வயப்படுத்தி அந்த திருக்கோயிலுக்கு வரவேண்டிய அந்த வருமானங்களை அவர்கள் வாங்கி அதை உரிய முறையில் பயன்படுத்துவார்கள் - பயன்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்பொழுது ஒரு கோயிலுக்கு 2,500 ரூபாய் ஆண்டொன்றிற்கு ஒரு கால பூஜைக்காக வழங்குகிறோம் என்று சொன்னால் அந்தத் தொகையை பெற தமிழ்நாடு முழுவதும் இங்கே அன்பர்கள் வந்து இருக்கின்றார்கள். அந்த தொகையை பெற்றவர்கள் மிக நல்ல முறையிலே எந்த காரியத்திற்காக அது கொடுக்கப்பட்டதோ அதைச் செவ்வனே பயன்படுத்தி அந்தந்த திருக்கோயில்களிலே, அங்கே


தீபம் ஏற்றவும், அங்கே ஆண்டவனை வழிபடவும் அதை கண்டிப்பாக நிச்சயமாக பயன்படுத்தவேண்டும்; பயன்படுத்துவார்கள் என்று நாம் மனதார நம்புகின்றோம். அப்படி இங்கே வந்திருக்கின்ற அன்பர்களுக்கு எல்லாம் இங்கே கூடியிருக்கின்ற அன்பர்களுக்கு எல்லாம், அந்த ஆண்டவன் மேலும் ஆசிகள் வழங்க வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்ளுகின்றோம். ஆண்டவனுடைய திருப்பணிக்கு நம்மை எல்லாம் ஆளாக்கிக் கொண்டு அந்த ஒரு கால பூஜைக்கு வழங்கக்கூடிய நிதியினை நீங்கள் பெற்று நல்லமுறையில் ஆலயங்களை நடத்திச் செல்லவேண்டும் என்று கூறிக் கொண்டு இந்த வாய்ப்பினை அளித்த இத்திருக் கோயிலை சேர்ந்த அன்பர்களுக்கும், இங்கு வருகைதந்திருக்கும் அன்பர்களுக்கும் இந்த விழாவினை மிக சிறப்பாக ஏற்பாடு செய்த அன்பர்களுக்கும் என்னுடைய சார்பாக நன்றியைக் கூறி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

## தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ்.மச்சேந்திரநாதன், ஐ.ஏ.எஸ். அவர்கள் ஆற்றிய உரை....

அறநிலையத்துறை ஆணையர் அவர்களே, மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய தமிழக அரசு வணிகவரி மற்றும் அறநிலையத்துறையின் செயலர் அவர்களே! இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! இன்று பழைமையும் கலையம்சமும் நிறைந்த அருள்மிகு நாகேஸ்வரசுவாமி ஆலயத்தைத் தரிசிக்கவும், இத்திருக்கோயிலில் ஆலய மேம்பாட்டுக்காக நடத்தப்படும் விழாவில் கலந்துகொள்ளவும் எனக்கு கிடைக்க வாய்ப்பினுக்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வாய்ப்பினை அளித்த அன்பர்களுக்கு முதலில் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆலய நிர்வாகம் என்பது எவ்வளவு முக்கியம் என்பதை நாம் சமீப காலத்தில் நன்றாக உணர்ந்திருக்கின்றோம். எந்த ஒரு மனிதனும், அவர் டாக்டராக இருந்தாலும் சரி, ஆசிரியராக இருந்தாலும் சரி பழமையான நமது கோவில்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும், எந்த ஐயமும் இருக்க இயலாது. நமது கலை, தெய்வீகம் மற்றும் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு சிறப்பு அம்சங்களை கொண்ட ஒரு முக்கிய மையமாக ஆலயங்களை நாம் கொண்டிருக்கிறோம். இப்பொழுது கூட நாம் நமது தொன்மையான கலைகளைப் பார்க்க வேண்டும் என்றால் முக்கியமாக ஆலயங்களுக்குத்தான் செல்ல வேண்டும். அதுமட்டுமல்ல நமது அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான மிகவும் முக்கியமான பல நிகழ்ச்சிகளை நடத்தும் வாய்ப்பு நமக்கு ஆலயங்களிலே தான் இருந்து வந்திருக்கின்றது. அது திருமணமாக இருந்தாலும் சரி, மற்ற நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி அவற்றை எல்லாம் நாம் ஆலயங்களில் தான் நடத்தி வருகின்றோம். ஆனால் இந்த ஆலயங்களை எந்த அளவுக்கு நாம் பாதுகாத்து வருகின்றோம்? அங்குள்ள விலை மதிக்க முடியாத சிலைகள் சிற்பங்கள் ஆகியவற்றை எந்த அளவுக்குப் பாதுகாத்து வந்திருக்கிறோம்! அவைகளின் மேம்பாட்டிற்காக நாம் எந்த அளவுக்கு உழைத்திருக்கிறோம் என்பதை எல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த ஆலய மேம்பாட்டுத் திட்டம் என்பது அந்த வகையில் மிகவும் சிறந்த ஒரு திட்டம் என்று நான் கூறுகிறேன்.

ஆலயங்களை மட்டும் பாதுகாத்து அவற்றை மேம்படுத்தினால் போதாது, அங்கு பணிபுரிபவர்களும் நல்லதொரு தரமான வாழ்க்கை வாழ்ந்தால் தான் அவர்களும் அந்தத் திருப்பணியில் ஈடுபட முடியுமென்ற ஒரு கருத்தினை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிஉதவி திட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். அந்த வகையிலே நமது ஆலயங்யங்களை நல்ல முறையிலே பேணிக்காப்பதற்கும் ஆலயங்களில் பூஜைகள் ஒழுங்காக நடத்துவதற்கும் இந்த திட்டம் மிகவும் முக்கியமான ஒரு திட்டமாகும். ஆலயங்கள் நன்றாக இருந்தால்தான், நமது கலாச்சாரம், நமது பழைமையான பண்பு ஆகியவற்றை நாம் கட்டிக் காக்க இயலும் என்ற என் கருத்தை இந்தத் தருணத்திலே வலியுறுத்த விரும்புகின்றேன். ஏனென்றால் ஆலயங்கள்தான் நமது கலைகளையும், கலாச்சாரங்களையும் பாதுகாத்து நமக்கும் நமது வருங்கால சந்ததியினருக்கும் பாலமாக விளங்கி வந்திருக்கிறது. நமது கலாச்சாரத்தை எடுத்துக் கொண்டால் அது இதுவரை



திரு. எஸ். மச்சேந்திரநாதன், ஐ.ஏ.எஸ். உரையாற்றுகிறார்.

யில் அழிந்தது இல்லை என்று சொன்னால் அதற்கு காரணம் நமது ஆலயங்களே. மற்ற சில மதங்களும் அவற்றின் பண்பாடுகளும் தேய்ந்து, தேய்ந்து நாளடைவில் அவை மறைந்தே போய்விட்டன என்றால் அதற்குக் காரணம் அவ்வச் சமயங்களின் சின்னங்களான ஆலயங்கள் மறைந்துபட்டமையே காரணம் எனலாம். அவ்வாறு இன்றி நமது சமயமும் சமயச் சின்னங்களாகிய ஆலயங்களும்தொன்று தொட்டுப் பாதுகாக்கப்பட்டு வருவது ஒன்றே நமது பலம் என்று சொல்லலாம்.

ஆகவே நமது ஆலயங்களைப் பேணி காப்பதற்கும், மற்றும் நமது பழைய கலாசாரத்தைப் பேணிக்காப்பதற்கும் வழிவகுக்கும் வகையில் இத்தகைய ஆலய மேம்பாட்டுத் திட்டங்களை நமது அரசே ஏற்று நடத்துவது பாராட்டத்தக்க ஒரு அரிய பணியாகும். இந்த விழாவில் கலந்து கொள்ள நல்ல ஒரு வாய்ப்பினை எனக்களித்து அறநிலையத்துறை நண்பர்களுக்கு நான் நன்றி கூறக்கடமைபட்டிருக்கின்றேன். சென்னையிலிருந்து இதற்கென அறநிலையத்துறை செயலரும் இத்துறை ஆணையர் அவர்களும் இங்கு வந்துள்ளார்கள். அவர்களுக்கும் இந்த மாவட்டத்தின் மக்கள் சார்பில்நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றேன்.

## தமிழக அரசின் அறநிலையத்துறை ஆணையர் மற்றும் செயலாளர் திருமிகு கு. ஆளுடையபிளளை, ஐ.ஏ.எஸ். அவர்கள் நிதி உதவி வழங்கி ஆற்றிய சிறப்புரை....

மதிப்பிற்குரிய விழாத்தலைவர் தமிழக இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு ராமதாஸ் அவர்களே, மதிப்பிற்குரிய தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. மச்சேந்திரநாதன் அவர்களே, மற்றும் இங்கு குழுமி இருக்கும் அறநிலையத்துறை மற்றுமுள்ள அரசுத்துறைஅலுவலர்களே, ஆலயத்தில் பல்வேறு நிலையில் செயலாற்றும் ஆலயப் பணியாளர்களே, பெரியோர்களே, தாய்மார்களே, செய்தித்துறை மற்றும் பத்திரிகைத் துறை அன்பர்களே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு தமிழக அறநிலையத்துறையின் சார்பில் செயலாற்றப்பட்டுவரும் ஆலயங்களின் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த நிதி உதவி எதற்காக வழங்கப்படுகிறது? எங்கிருந்து இதற்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டது? இதனால் யார் எல்லாம் பயன்பெறுகிறார்கள் என்பனவற்றையெல்லாம் விளக்கமாகவும் தெளிவாகவும், அறநிலையத்துறை ஆணையர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். கடந்த 4 ஆண்டுகளாக இந்த ஆலய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்

| | |
|---|---|
| **ஒரு கால பூஜை நிதிக்குப் பயன்பெற்ற ஆலயங்கள்** | **2144** |
| **திருப்பணிக்கு நிதி உதவி பெற்ற கிராமப்புற ஆலயங்கள்** | **458** |
| **சம்பள பாக்கி பெற்ற ஆலயப் பணியாளர்கள்** | **7365** |

ஆகவே இது எவ்வளவு நல்ல திட்டம் எவ்வளவு பயனுள்ள திட்டம் என்பதை எண்ணிப்பாருங்கள் நமது திருக்கோயில்கள் மேலும் நலிந்து பின்தங்கிப் போகாமல் இருப்பதற்கு ஒரு பாதுகாப்பு அளிக்கும் திட்டம் இது என்பதை நான் சொல்லாமலே நீங்கள் புரிந்து கொள்வீர்கள். தமிழகத்தின் பாரம்பரியம் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அருமையாகச் சொன்னார்கள். நமது கலைச் செல்வங்களைப் போற்றிப் பாதுகாப்பது, பண்பாட்டைப் பாதுகாப்பது. நாகரீகத்தைப் பாதுகாப்பது இறை உணர்வைப் பாதுகாப்பது என்பன எல்லாம் மிக மிக இன்றியமையாதவை. இன்று நாம் வழிபடும் இந்த திருத்தலங்களிலே இருக்கும் விக்கிரக திருமேனிகள் எத்தனை ஆண்டுக்கு முற்பட்டவை என்பதை நாம் அறிவோம். குறைந்தது ஐயாயிரம் ஆண்டுகள், மூவாயிரம் ஆண்டுகள் என்றுதான் சொல்ல முடியுமேயொழிய நூறு, இருநூறு, முந்நூறு என்று நாம் சொல்ல முடியாது. ஆயிரக்கணக்கிலேதான் சொல்லமுடியும். நால்வர் பாடிய பாடல்கள் பெற்ற திருத்தலமாக இருந்தால்



**அரசுச் செயலாளர் திருமிகு கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ். உரையாற்றுகிறார்.**

சாதாரணமாக 1300 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆலயம் என்பதை நாம் கணித்துவிட முடியும். இங்கு வருவதற்கு முன்பு ஆணையரும் நானும் இன்னம்பூருக்குச் சென்று இறைவனை வழிபட்டு வந்தோம். அங்கு போனதும் நாங்கள் கதிகலங்கி செய்வதறியாது மலைத்து நின்றோம். எவ்வளவு பெரிய திருக்கோயில்! எவ்வளவு பெரிய கருவறை! எவ்வளவு பெரிய சிவலிங்கம்! திருநாவுக்கரசு சுவாமிகளும், திருஞானசம்பந்த சுவாமிகளும் பதிகம் பாடியிருக்கின்றார்கள்.

''எண்டிசைக்கும் புகழ்இன்னம்பர் மேவிய
வண்டிசைக்கும் சடையீரே
வண்டிசைக்கும் சடையீர் உமை வாழ்த்துவார்
தொண்டிசைக்கும் தொழிலாரே!''

என்று பாடுகிறார் திருஞானசம்பந்தர்.

''விண்ணவர் மகுடகோடி மிடைந்தசேவடியர் போலும்
பெண்ணொரு பாகர்போலும் பேடலியாணர் போலும்
வண்ணமால் அயனும் காணா மால்வரை எரியர்போலும்
எண்ணுருவநேகர் போலும் இன்னம்பர் ஈசனாரே''

என்று பாடியுள்ளார் திருநாவுக்கரசர்.

இப்படிப்பட்ட ஒரு திருக்கோயில் இன்று எந்த நிலையில் இருக்கிறது என்பதை நினைத்துப் பார்க்கும்போது கண்ணீரில் இரத்தம் வடிகின்ற அளவுக்கு மனம் வேதனைப்படுகிறது. இதற்கெல்லாம் காரணம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஆணையர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் காலத்திலே மன்னர்கள் நூற்றுக் கணக்கான கிராமங்களைக் கோயில்களினுடைய திருப்பணிக்காகவும் அன்றாட செலவினங்களுக்காகவும் அதில் பணிபுரியும் ஊழியர்களுக்காகவும் மானியமாக வழங்கி அதிலிருநது வரும் வருமானத்தை ஆலயங்களின் மேம்பாட்டிற்குப் பயன்படுத்த ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். நாளடைவில் பல்வேறு தளர்ச்சிகள் ஏற்பட்டு, தொய்வுகள் ஏற்பட்டு எந்த ஒரு காரணத்திற்காக அந்த நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டனவோ அந்த காரணங்கள் அல்லாமல் வேறு வகையாக இந்த அசையாச் சொத்துக்கள் பயன்படுத்தப்பட்ட நிலையிலேயே கோயில்களுக்கு வருமானம் பெரிதும் குன்றிப் போய்விட்டது. இதனுடைய விளைவாக சமுதாயம் ஒரு இக்கட்டான நிலையில் தன்னை இருத்திக் கொள்ளும் ஒரு நிலை வந்தது.

நாம் முன்பெல்லாம் சொல்வோம் தமிழ் நாட்டினுடைய பாரம்பரியமே கோயில்கள் தழுவிய குடிகளும், குடிகளை தழுவிய கோயில்களுமாக இருக்கிறது என்று. நமது மக்கள் கோயிலுக்கு ஆக வேண்டியவற்றைச் செய்து அவற்றைப் பாதுகாத்துச் சிறப்பாக சீரிய முறையில் விழாக்கள் எல்லாம் நடத்தி அங்குள்ள பணியாளர்கள் எல்லாம் சிறந்த முறையிலே வாழ்வதற்கு வழி வகுத்திருக்கிறார்கள். ஆனால் இன்றைய நிலையிலே சற்று மாறுபட்ட ஒரு நிலையைக் காணுகின்றோம். அதனுடைய விளைவுதான் முப்பொதும் திருமேனி தீண்டும் அர்ச்சகப் பெருமக்கள் பலரும் நாம் உதவி செய்தாக வேண்டிய நிலையில நலிந்திருக்கிறார்கள். அவர்களை மேம்படுத்த இத்தகைய திட்டங்களை ஏற்படுத்தி அதன் மூலம் அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்க முயன்று கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு திருக்கோயிலும் தன்னுடைய வருமானத்தை வைத்தே அவ்வவ்வாலயங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு உரிய ஊதியங்களை வழங்கும் வகையில் அவைகள் மேம்பாடு காணவும் இத்திட்டம் வழிவகுத்துக் கொடுக்கும் என்று நான் எண்ணுகிறேன். இதற்கு நாம் செய்ய வேண்டிய முயற்சி திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களில் இருந்து வரவேண்டிய பாக்கிகளை குறித்த நேரத்திலே வசூலித்து ஆகவேண்டிய கடமையை அறநிலையத்துறை சரியாக செய்தாக வேண்டிய பொறுப்பும் அதற்கு இருக்கின்றது. அதற்கு நமது மாவட்ட ஆட்சித் தலைவரும் அவர்களுடைய அலுவலர்களும் பேருதவி செய்ய வேண்டுகிறேன்.

பொதுவாக மக்கள் அனைவரும் ஒருமித்து செயல்பட்டால்தான் இந்த பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணமுடியும். நம் ஆலய நிலங்களிலிருந்து

---

### ஞானிகளின் மனஉறுதி

**இருக்கு மிடம்தேடி என்பசிக்கே அன்னம்**
**உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன்— பெருக்க**
**அழைத்தாலும் போகேன் அரனேஎன் தேகம்**
**இளைத்தாலும் போகேன் இனி.**

**—பட்டினத்தார்**

---

வரவேண்டிய பாக்கித் தொகை சுமார் 35 கோடி ரூபாயாக தற்போது இருந்து வருகிறது. இந்த ஒரு நிலையிலே நாம் எல்லோரும் ஒத்துழைத்து அவரவர்கள் கடமையை செய்தால்தான், குத்தகைதாரர்களும் தம் பொறுப்பு உணர்ந்து வரவேண்டிய பாக்கியை தந்தால்தான் ஓரளவுக்குசேனும் இந்த பிரச்சினை தீர்ந்து நமது ஆலயங்களும் ஆலயங்களில் பணியாற்றும் ஊழியர்களும் நல்ல மேம்பாட்டினைக் காண இயலும்.

நமது அறநிலையத்துறையிலே ராஜராஜ சோழனின் 1000ஆவது முடிசூட்டு விழாவின் நிறைவையொட்டி குறைந்தது ஒரு 60 திருக்கோயில்களிலாவது திருப்பணிகள் செய்து குடமுழுக்கும் செய்ய வேண்டும் என்ற ஒரு பணியை நான்கு ஆண்டுகளுக்கு முன்பு மேற்கொண்டோம். நான்காம் ஆண்டுநிறைவடைந்தநிலையிலே இப்பொழுது அந்த 60 எண்ணிக்கையையும் தாண்டி இன்னும் தொடர்ந்து பல கோயில்களிலே திருப்பணி நடந்து குடமுழுக்கு விழாவும் நடைபெற்று வருகிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்கும் பொழுது பக்தர்களுடைய ஆன்மீக உணர்வும் இறையுணர்வும் குன்றி விடவில்லை என்பது தெளிவாகத்தெரிகிறது. அவ்வுணர்வினை ஒருமுனைப்படுத்தி சரியான வழியிலே பயன்படுத்தி எந்த இடத்திலே அது தேவைப்படுகிறதோ அந்த இடத்திலே அதை நாம் கொண்டு சேர்த்து அதனால் இறையுணர்வு வளர்வதற்கும் நலிந்த கோயில்கள் மேலும் நலிவடையாமல் இருப்பதற்கும் வழி வகுக்க முடியும்.

இதையொட்டி கடந்த சில நாட்களுக்கு முன்பு நான் ஆணையருடன் கலந்து பேசினேன். அந்த பேச்சின் விளைவாக ஒரு முடிவு எடுத்தோம். உங்கள் அனைவருக்கும் தெரியும். நமது அரசின் ஆணைப்படி தமிழகத்திலே உள்ள எல்லா அரசு அலுவலங்களிலும் அந்தந்த அலுவலகத் தலைவர் அந்தந்த அலுவலகத்திலிருந்து மக்கள் குறையை கேட்டு அவற்றை தீர்க்க வேண்டும். அவர்களுடைய பிரச்சினையை கேட்டறிய வேண்டும். அந்த அடிப்படையிலே நமது அறநிலையத் ஆட்சித்துறையிலும் துணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்கள் எல்லாம் அவரவர்கள் அலுவலகங்களிலே இருந்து வாரவாரம் திங்கட் கிழமையன்று வெளியூர்களுக்கு எங்கும் முகாம் செல்லாமல் தம்முடைய தலைமை அலுவலகத்திலேயே இருந்து மக்கள் குறையைக் கேட்டு அவற்றைக் களைய தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

நமது மக்களுக்கு சிறப்பாக ஆலயத் திருப்பணி செய்ய வேண்டும். ஆலயத் திருப்பணிகளில் பங்கு கொள்ள வேண்டும் என்கிற நல்ல எண்ணம் இருக் கின்றது. நான் இந்தத் திருக்கோயில் விமானத்தைச் செய்து கொடுக்கிறேன் அல்லது இந்தத் திருக் கோயிலுக்குத் தளவரிசை போட்டுத்தர விரும்பு கின்றேன் அல்லது இந்தத்திருக்கோயிலில் திருமதில் கட்டுவதற்கு ஒரு தொகையை நான் அளிக்க விரும்புகின்றேன் என்று எல்லாம் அவர்கள் நூற் றுககணக்கிலே முன்வர ஆர்வமாக இருக்கின்றார் கள். அவர்களுக்கெல்லாம் ஒரு வழிகாட்டுவது போல இந்த ஒரு ஏற்பாட்டை செய்து இது எந்த அளவிற்குச் செயல்படுகிறது என்பதைப் பார்த்து மேலும் மேலும் இதை விரிவு படுத்தலாம் என்று ஆணையர் அவர்கள் தம்முடைய கருத்தை வெளியிட்டார்கள்.

ஆகவே திருப்பணி செய்ய விரும்பும் எந்த அன்பரும் எவ்வளவு தொகையாக இருந்தாலும் சரி ஐயாயிரம் ரூபாயாக இருந்தாலும் சரி அல்லது பத்தாயிரம் ரூபாயாக இருந்தாலும் சரி, அல்லது இலட்ச ரூபாயாக இருந்தாலும் சரி அவர்கள் தங்க ளுடைய கருத்தையும், அவர்கள் எந்த திருக்கோயி லுக்கு அதைச் செய்ய விரும்புகிறார்கள் என்பதை யும் அவர்கள் தங்களுடைய இருப்பிடத்திற்கு பக் கத்திலே உள்ள உதவி ஆணையர் அல்லது துணை ஆணையர் அலுவலகத்திற்குத் திங்கட்கிழமையன்று சென்றால் அவருடன் கலந்து பேசலாம். அங்கு பொறியாளர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் உதவி கொண்டு உடனுக்குடன் வேண்டிய எஸ்டி மேட், பிளான் தயார் செய்து அதை ஆணையருக்கு அனுப்பி விரைவாக அந்தத் திருப்பணியை மேற் கொள்ள ஒரு தூண்டுகோலாக செயல் அலுவலர் களும் செயல்படவேண்டுமென அறிவுறுத்தப்பட்டு வருகிறது. ஏனென்றால் பொதுவாக ஒரு கருத்து நிலவுகிறது. திருப்பணி செய்ய விழையும் பெரு மக்கள் அறநிலையத்துறையின் அனுமதி வாங்கி வருவதற்குள் மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளது. மிகக் காலதாமதம் நேரிடுகிறது என்கிற ஒரு தவ றான கருத்து உருவாகிறது. இந்த கருத்து வேரோடு களைந்து எடுக்கப்படவேண்டும். அதற்காக . நாம் நம் நம்முடைய நிர்வாக நடைமுறையை எளிதாக்கிச் சிக்கலற்றதாக ஆக்கி, திருப்பணி செய்ய விரும்புகிறவர்கள் எவரும் குறிப்பிட்ட பிளான் எஸ்டிமேட் டோடு துணை ஆணையர் அலுவலகத்திற்கோ அல்லது ஆணையர் அலுவலகத்திற்கோ அதை அனுப்பிவைத்தால் அதை ஒரு வார காலத்திலேயே சரிபார்த்து அதற்கு உள்ள உத்தரவு அனுமதியும் கொடுப்பது என்ற ஒரு முடிவை நாம் இப்போது எடுத்து செயல்படுத்தி வருகின்றோம்.

இந்த ஒரு வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொண்டு ஆன்மீக பெருமக்கள் மேலும் மேலும் திருப்பணி செய்து திருக்கோயில்கள் சீரும் சிறப்பு மாக பொலிவுடன் விளங்குவதற்கு ஒத்துழைக்க வேண்டுகிறேன். இந்த ஒரு சந்தர்ப்பத்திலே இந்த எனது வேண்டுகோளை நான் தெரிவிப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்றும் கருதுகிறேன். ஆகவே இன்று இந்த நிகழ்ச்சியிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கலந்துகொண்டது எனக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது. அவர் கள் சிறந்த ஆன்மீக உள்ளம் படைத்தவர். நம் முடைய பக்திக் கலாசாரத்தைப் பேணி மிக நல்ல திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றவேண்டுமென்ற அக்கறையும் ஆர்வமும் உள்ளவர்கள். அவர்களு டைய ஒத்துழைப்பினால் இந்த மாவட்டத்திலே அறநிலையத்துறை வெகு சிறப்பாக செயல்படும் என்றும் நான் கருதுகிறேன். அதே போன்று நமது ஆணையர் அவர்கள் இப்பொழுது சொன்ன மாதிரி பொது மக்கள் பெருமளவிலே தங்கள் கடமையை உணர்ந்து திருகோயில்களுக்கு செலுத்த வேண் டிய பாக்கிகளை உடனுக்குடன் செலுத்திக் திருக் கோயில்கள் வளரவும், திருக்கோயில்கள் பொலி வுடன் திகழவும் உதவ வேண்டுமென்றும் கூறிக் கொண்டு பற்பல திருக்கோயில்களில் இருந்து வந் துள்ள ஆலய ஊழியர்கள், அர்ச்சகர்கள், பட்டாச் சாரியர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

**தொகுப்பு: அருட்செல்வி**

# திருக்கோயில் உள்ள ஊரே ஊர்!

—— 0 ——

**"திருக்கோயில்" இல்லாத ஊர் திருவில் ஊர் என்று பாடியுள்ளார் அப்பர்.**


**ஆகவே ஊர்கள் தோறும் திருக்கோயில் இருத்தல் வேண்டும்.**

**"திருக்கோயில்" இதழும் கூட வருதல் வேண்டும்.**

**"திருக்கோயில்" களுக்குச் செலுத்த வேண்டிய பாக்கிகளைச் செலுத்துங்கள்.**

**"திருக்கோயில்" இதழுக்கு ஆயுள் சந்தா செலுத்துங்கள்.**

# கந்தவேள் கருணை



திருமுருக
கிருபானந்த வாரியார்

[ 12 ]

பிரணவப் பொருள்தான் என்ன? ப்ர என்றால் விசேஷமானது; நவம் என்றால் புதுமை. அநுபவிக்க அநுபவிக்கப் புத்தம் புது விசேஷ உண்மைகளை உணர்த்துவது பிரணவம் (பிரநவம்). என்றும் வாடாமல், காலத்தால் தேயாமல் எப்போதும் புதுமையாகவே இருக்கும் ஆன்ம தத்துவம்தான் பிரணவம். உலகை மாயா என்று சொல்லுகிறோம். இதற்கு வேறு வேறு மதவாதிகள் வேறு வேறு பொருள் கொள்கிறார்கள். ஒரு பொருள்: 'மா' ஒடுக்கம். யா-தோற்றம். தோற்றமும் ஒடுக்கமும் உடையது உலகம் என்பது பொருள். இந்த உலகம் எதில் தோன்றியதோ அதில் ஒடுங்குகிறது. உலகமும் உயிர்களும் மாயையில் தோன்றி மாயையிலேயே முடிகின்றன. உலகத்தின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் 'பரப்பிரம்மம்' தான் காரணம் என்று வேதம் சொல்கிறது. கடல்நீரை மாயை என்று சொல்வோமானால் அதன் அகண்ட வெளிதான் பிரம்மம். கடலில் தோன்றிக் கரையில் மோதி மோதி அழியும் அலைகள்தான் உயிர்கள். ஆக, உயிர்களும் உலகும் பிரம்மத்திலிருந்து தோன்றிப் பிறகு, அங்கேயே மடிகின்றன.

மூலப்பிரகிருதி என்பது ஆன்மாக்கள் எல்லாம் வெளிப்படுவதற்கும், எண்ணற்ற அண்டங்கள் தோன்றிப் பெருகுவதற்கும் அடிப்படையாக இருப்பது. மூலம் என்றால் வேர். பிரகிருதி என்றால் இயற்கை. ஆன்மாக்கள் அத்தனையும் அந்த மூலப் பிரகிருதியிலேயே அணுவடிவில் அடங்கியிருக்கின்றன. மூலப் பிரகிருதியில் அடங்கியுள்ள ஆன்மாக்களுக்குத் தன் தனிப்பெருங் கருணையால் விடுதலை தந்து, வடிவு எடுத்துக்கொள்ள உடலும் தந்து சிந்திக்க உள்ளமும், வாழ உலகமும் தந்து ஆட்டுவிக்கிறது அருட்பெருஞ்சோதி. தனு, கரணம், புவனம், போகம் என்ற பெயர்களில் முறையே உடல், உள்ளுறுப்பு, உலகம், இன்பம் இவற்றை அளிக்கிறது. இறைவனுடைய இந்தத் தனிப்பெருங் கருணையைத்தான் பராசக்தி என்கிறோம். பராசக்தியாகிய அந்தக் கருணை வெள்ளத்தை எது தாங்க முடியும்? மகா நதியைப் பயிர்கள் தாங்க முடியாததால் பற்பல கால்வாய்களின் மூலம் பிரித்து வயலுக்குள் விடுகிறோம் அல்லவா? இதே போல் பராசக்தியாகிய கருணை வெள்ளமும் பிரிந்து பிரிந்து வந்து உயிர்களுக்கு உய்வு அளிக்கிறது. பராசக்தி வெள்ளத்தின் ஆயிரத்தில் ஒரு பங்காக ஆதிசக்தி பிரிந்தது. அதன் ஆயிரத்தில் ஒரு பங்காக ஞான சக்தி பிரிந்தது. இதிலிருந்து ஆயிரத்துள் ஒரு பங்காகப் பிரிந்தது கிரியா சக்தி. இதுதான் உலகை இயக்குவது. கிரியா சக்தியின் ஆயிரத்துள் ஒரு பங்காகப் பிரிந்தது இச்சா சக்தி. இச்சா சக்தியாக அருள் வீழ்ச்சி விந்து என்கிற சுத்த மாயையில் விழ அது சுழன்றது. நீர் வீழ்ச்சியானது சக்கரத்தில் விழுந்தவுடன் அது சுழன்று மின்சாரம் பிறப்பதுபோல் குடிலா சக்தி பிறந்தது. (வட்டமான விந்திலிருந்து நேரான சக்தி பிறந்ததைக் குறிக்குமுகமாகவே சுழியுடன் கோடு சேர்த்து 'உ' என்று பிரணவப் பொருளாகிய பிள்ளையார் சுழி இடுகிறோம்) குடிலையின் வடிவமே ஓம். குடிலை விந்துவின் சுழற்சியிலிருந்து நேராகப் பிறந்தபோது அதிலிருந்தே நாதம் உண்டாயிற்று. அதாவது இறைவனது அருள் வீழ்ச்சியானது சுத்த மாயையின் மேல் விழும்போது அது சுழலத் தொடங்குகிறது; அப்போது பிறந்த குடிலையிலிருந்து முத்தொழில் புரியும் மும்மூர்த்திகள் தோன்றுகிறார்கள். விந்து சுழன்றது, நாதம் நேராகத் தோன்றியது. இதுவே சுழியும் கோடும் சேர்த்து ''உ'' என்று முதலில் எழுதுகின்ற பிள்ளையார் சுழி.

''நாத விந்துகலாதீ நமோநம
வேத மந்தரசொ ரூபா நமோநம''

பராசக்தியிலிருந்து கடைசியில் குடிலா சக்தி வரை ஆறு சக்திகள் உள்ளன. இந்தச் சக்திகள் ஆறும் முருகப் பெருமானது ஆறுமுகங்கள்.

''ஆதியொடு அந்த மாகிய நலன்கள்
ஆறுமுகமென்று தெரியேனே''

என்று அருணகிரியார் பாடுவது இதனைத்தான்.

மயில்தோகையை விரித்து ஓம் என்று பிரணவ வடிவத்தைக் காட்டி ஆடுகின்றது. மயிலின் கழுத்திலிருந்து தொடங்கி விரித்த தோகையைச் சுற்றிக் கீழே அதன் காலடிகள் வரை கொணர்ந்து முடித்து எழுதினால் 'ஓ' என்ற ரூபமாகவே அமையும்.

''ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
ஆடு மயிலென்ப தறியேனே''

என்று அருணகிரிநாதர் பாடுகிறார்.

முருகப்பெருமான் ஓங்காரத்துட் பொருளாகவும் அதே போழ்தில் அதற்கு அப்பாலும் நிலவுகிறான். அவனது வேலே ஞான சக்தி. மயில் விந்தின் வடிவம். சேவல் கொடியே நாதம். (வேல்,



முருகன் மேல் சாய்ந்தே யிருத்தல் வேண்டும். முருகன் தலைக்கு மேல் வேல் உயர்ந்து நிற்றல் கூடாது; இவ்வரலாற்று முடிவில் வல்லிதேவ சேனா சமேதராக நாம் சுப்பிரமணியசுவாமியைக் காணும் போது வள்ளியும், தெய்வயானையும் முறையே இச்சா சக்தியும் கிரியா சக்தியும் ஆவர். முருகப் பெருமானின் வலக்கரம் மேல் நோக்கியிருந்து அபயமும், இடக்கரம் கீழ்நோக்கியிருந்து வரதமும் காட்டும், வள்ளி முருகனுக்கு வடப்பக்கமும், தெய்வயானை இடப்பக்கமும் நின்றிருப்பர். வள்ளியின் கையில் தாமரையும் தெய்வயானையின் கையில் குமுதமும் மலர்ந்து நிற்கும். முருகப் பெருமானுக்கு வலக்கண் சூரியனாகவும் இடக்கண் சந்திரனாகவும் அமைந்திருப்பதால் சூரிய ஒளிபடும் தாமரை மலரும் குவிவதில்லை. சந்திர ஒளிபடும் குமுதமும் குவிவதில்லை. முருகப் பெருமானின் ஆறுமுகங்களிலும் ஆறு தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன. ஓம் என்ற எழுத்தில் அகரம், உகரம் மகரம், விந்து, நாதம், கலை இந்த ஆறும் அடங்கியுள்ளன என்பதை ஆறுமுகம் தரித்த ஐயன் உணர்த்தியிருக்கிறார். இந்தத்தத்துவங்களைப்பரமனுக்குக் குமரன் ஓதியதையே 'ஓரெழுத்தில் ஆறெழுத்து ஓதுவித்த பெருமானே' என்று அருணகிரிநாதர் பாடுகிறார்.

ஒப்பற்ற வேலையுடைய பரம்பொருளைக் குருவாகக் கொண்டு அருள் பெற்றாலன்றி மெய்ப் பொருளை அறியமுடியாது. பல பிறப்புக்களில் முயன்றாவது முருகப்பெருமானை குருநாதராக அடைய வேண்டும். ஞானாசிரியராகிய சிவபெருமானுக்கே உபதேசித்த முருகக் கடவுள் ஞான பண்டிதன் அல்லவா?

கந்தக் கடவுளிடம் உபதேசம் கேட்டருளிய சிவபெருமான், திருவுளம் மகிழ்ந்து எத்தகைய பெருமிதம் உள்ளவர்க்கும் குருநாதன் அவசியம் இருத்தல் வேண்டும் என்பதை உலகுக்கு உணர்த்தினார்.

குமாரக் கடவுளை அங்கேயே இருக்கும் வண்ணம் பணித்துப் பிரமன், திருமால் இந்திரன் முதலிய தேவர்களுக்கு விடை தந்து திருக்கயிலாய மலையடைந்து திருக்கோயிலினுட் சென்று வீற்றிருந்தருளினார். இவ்வாறாக, சுவாமியாகிய சிவபிரானுக்கு நாதனாகி உபதேசித்து சுவாமிநாதனாகிப் பெருமை கொண்டார் முருகப் பெருமான்.

முருகப் பெருமானிடம் சிவபெருமானே உபதேசம் கேட்டார் என்பதை அறிந்த அகத்திய முனிவர் தாமும் குடிலை மந்திரத்தின் பொருளை



உணரவேண்டும் என்று முருகப் பெருமானை நாடிக கந்த வெற்புக்கு வந்தார். வீரவாகு தேவரிடம் அனுமதி பெற்று, செம்பொன்னாலயத்தினுள் சென்று, கந்தவேளை வலம் வந்து வணங்கினார். ''எம் பெருமானே! காமனை எரித்தவர் தேவரீருடைய தந்தை; காமன் கணையால் வாடுபவன் நான். காலனை உதைத்தவர் தேவரீர் தந்தை; காலனுக்கு அஞ்சுபவன் நான். எல்லாம் வல்ல இறைவனுக்கே பிரணவ மந்திரத்தின் பொருளை உபதேசித்த தேவரீர், அதனை அடியேனுக்கும் உபதேசித்தருள வேண்டும்'' என்று வேண்டிக் கை கட்டி வாய் பொத்தி நின்றார்.

அகத்திய முனிவரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட கந்தவேள், பிரணவ மந்திரப் பெருமையையும், வேதாகமங்களின் மெய்ப்பொருளையும் உபதேசித்தருளினார்.

திருமாலின் கண்ணின் மணியிலிருந்து சொரிந்த ஆனந்த பாஷ்யத்திலிருந்து சுந்தரம் மிகுந்த இரு நங்கையர் தோன்றினர். திருமாலின் நயனத்தில் உதித்த புதல்வியராகிய அமிர்தவல்லியும், அவள் தங்கை சுந்தரவல்லியும் கந்தக் கடவுளைத் திருமணம் புரிந்து கொள்ள விரும்பினார்கள். அவர்கள் இருவரும் தங்கள் விருப்பம் நிறைவேறும் பொருட்டு இமயமலையில் உள்ள சரவணப் பொய்கைக்கு வந்து, சடக்கர மந்திரம் ஜபித்துப் பன்னெடுங் காலம் அருந்தவமிருந்தார்கள். தவத்துக்கு இரங்கிய முருகப் பெருமான் அவர்கள்முன் எழுந்தருளிக் காட்சி தந்தார்.

இறைவனைக கண்ட கன்னியர் இருவரும், அவரது திருத்தாளைப் பணிந்து துதித்து நாணி நின்றார்கள்.

கந்தவேள் அவர்களை நோக்கி, "நீங்கள் எதனை வரும்பித் தவம் செய்தீர்கள்?" என்று வினவினார்.

திருமால் புதல்வியர்கள் கைகுவித்து நின்று, "எம்பெருமானே! தேவரீர் அடியவர்களாகிய எங்களைத் திருமணம் புரிந்து கொள்ளும் பொருட்டுத் தவம் செய்தோம். எங்களுக்குத் திருவருள் செய்ய வேண்டும்." என்று வேண்டிக் கொண்டார்கள்.

அவர்களை அப்பொழுதே முருகப் பெருமான் மனைவியராக ஏற்றுக் கொள்ளவில்லை, இறைவன் சக்தியோடு இருக்கும் பொழுது அழித்தல் வேலை நிகழாது. சக்தி அருளின் வடிவம் அல்லவா? ஆகவே, சூரசம்ஹாரம் நிகழ்ந்த பின்பே முருகப் பெருமான் அவர்களை மணக்க எண்ணம் கொண்டார். சிவபெருமானும் உமாதேவியாரை மணப்பதற்கு முன்பு தான் காமனை எரித்தார்; இராமபிரானும் சீதையைப் பிரிந்த பின்பே இராவணனை அழித்தார்.

ஆறுமுகக் கடவுள் அமிர்தவல்லியை நோக்கி, "நீ இந்திரனுக்கு மகளாய் வளரக்கடவாய்"! என்று அருள்பாலித்தார். சுந்தரவல்லியை நோக்கி "நீ பூமியிலே சிவமுனிக்குப் புதல்வியாகத் தோன்றி வேட்டுவரிடத்தில் வளரக் கடவாய்" என்றார்.

ஒருத்தி துரை மகள்; ஒருத்தி குறமகள். ஒருத்தி பொன்னுலகம்; ஒருத்தி மண்ணுலகம். புனத்திற்குக் காவற்காரி.

கன்னியர் இருவரையும் நோக்கிக் கந்தக் கடவுள், "நீங்கள் இருவரும் இவ்வாறு வளரும் பொழுது நாம் வந்து, உங்களை முறைப்படி திருமணம் செய்து கொள்ளுவோம்; செல்லுங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினார். கன்னியர் இருவரும் கைதொழுது விடைபெற்றுச் சென்றனர்.

அமிர்தவல்லி ஓர் அழகிய குழந்தை வடிவம் கொண்டு மேரு மலையில் வாழ்ந்த இந்திரன் முன் சென்று, "தேவர் கோமகனே! நான் உன்னுடன் உபேந்திரனாகப் பிறந்த நாராயணரின் மகள்: ஆதலால் நீ எனக்குத் தந்தை முறையாவாய்! நீ என்னை மகளாக வளர்க்கக் கடவாய்" என்றாள். இந்திரன் அவளை நோக்கி "தாயே! இங்கு வா" என்று சொல்லி எடுத்தணைத்து உள்ளம் பூரித்தான். தனது ஊர்தியாகிய ஐராவதத்தை அழைத்து "இவள் நம்முடைய மகள்; இவளை நீ அன்போடு வளர்த்துவரக் கடவாய்; இவளால் இனி நமக்கு எல்லையில்லாத சீரும் சிறப்பும் உண்டாகும்" என்றான். ஐராவதம் அந்தக் குழந்தையைத் தன் பிடரிமேல் வைத்துக்கொண்டு, சத்திய உலகத்தின் தலைநகராகிய மனோவதியை அடைந்தது. அங்கேயே அக்குழந்தையை வளர்த்து வந்தது. தேவராஜனின் யானை வளர்த்ததால் அக்குழந்தைக்குத் தெய்வயானை என்னும் பெயர் ஏற்பட்டது. சேனையும் அரசும் இழந்து தவித்த தேவராஜனுக்கு ஒரு சேனையே கிடைத்தாற் போன்ற உற்சாகமளித்தமையால் தேவசேனை என்றும் அவளைச் சொல்வதுண்டு.

திருமகளும் நாணும் வனப்புடன் திகழ்ந்தாள் தெய்வயானை, அரைநொடியும் விடாது அறுமுக தேவனத் தியானித்த வண்ணமாகவே இருந்தாள்.

இளையவளாகிய சுந்தரவல்லி தொண்டை நாட்டிலுள்ள வள்ளி மலைக்கு வந்து முருகப் பெருமானைக் குறித்துத் தவம் செய்து கொண்டிருந்தாள்.

காமமே இல்லா கடவுளை அடையத் தவம் கிடந்தனர் அமிர்தவல்லியும், சுந்தர வல்லியும். அவர்களுக்கு முருகப்பெருமான் திருவருள் புரிந்தார். பற்று விட்டவர்களைத் தான் செல்வங்கள் பலவும் வந்தடைகின்றன; இச்சாசக்தியும், கிரியா சக்தியும் காமத்தையும் வென்றவன் கட்டளையை விரும்பி நிறைவேற்றுகின்றன. ஆகவே பற்றினை ஒன்றை எண்ணும்போதும், பேசும்போதும், குகனைச் சிந்தை செய்ய வேண்டும்.

அழகு அழகுடன்தானே சேரவேண்டும்? அழகே உருவான திருமாலின் புதல்விகள் முருகனை தானே சேரவேண்டும்? முருகன் அழகுத் தெய்வம், அந்திச் செவ்வானத்தின் அழகுதான் முருகன். முருகு என்று சொல்லுக்கு அழகு என்பது பொருள்.

"எழுதரிய ஆறுமுகம் அணிநுதலும் வயிரமிடை
யிட்டுச் சடைந்தசெஞ் சுட்டிக் கலன்களும்
துங்கநீள்பன்
னிருகருணை விழிமலரு மிலகுபதினிருகுழையும்
ரத்நக்குதம்பையும் பத்மக்கரங்களுஞ் செம்
பொன்நூலும்
மொழிபுகழு முடைமணியு மரைவடமும்
அடியிணையும்
முத்தச் சதங்கையுஞ் சித்ரச் சிகண்டியுஞ்
செங்கை வேலும்
முழுதுமழ கியகுமர! கிரிகுமரி யுடனுருகு
முக்கட் சிவன்பெறுஞ் சற்புத்ர உம்பர்தந்த
தம்பிரானே"

என்று அருணகிரிநாதர் முருகனை அழகாக வர்ணிக்கிறார். இத்தகைய அழகுத் தெய்வத்தை மணாளனாகத் தேர்ந்தெடுத்த அந்தக் கன்னியர்கள் எப்படிப்பட்டவர்கள்?

அமிர்தவல்லி என்றால் அமுதமேஉருவெடுத்த கொடி போன்றவள். சுந்தர வல்லியோ அழகே வடிவெடுத்த கொடிபோன்றவள். கலைமகளுக்குச் சொல்லில் அழகு. திருமகளுக்கு முகத்தில் அழகு. திருமாலுக்குக் கண்கள் அழகு. இப்படி ஒவ்வொருவருக்கும் முக்கியமான அழகு தருவது ஓர் அவயவம். ஆனால் அமிர்தவல்லியும் ,சுந்தரவல்லியும் எல்லா வகையிலும் அழகு பெற்று இலங்கினர்.

திருமாலின் புதல்வியர்கள் இருவருக்கும் வரமளித்தபின் முருகப் பெருமான் கந்த வெற்பை அடைந்தார். பெருங்கருணையோடு அங்கு சில காலம் வீற்றிருந்தபின், இலக்கத்தொன்பது வீரர்களும் பூதகணங்களும் சூழத் திருக்கயிலாய மலையையடைந்தார். தாய் தந்தையரான சிவபெருமானையும், உமாதேவியாரையும் அன்புடன் வணங்கி, அவர்களுக்கு நடுவே கவினுற எழுந்தருளியிருந்தார். இவ்வாறு எழுந்தருளியிருக்கும்போது, சூரபன்மனால் உள்ளந்தளர்ந்த தேவர்கள் திருக்கயிலாய மலையை அடைந்தார்கள்.

இந்திரன் சிவபெருமானை நோக்கி, "அருட்சத்தியாகிய அம்பிகையுடன் எழுந்தருளியுள்ள முழுமுதற் கடவுளே! அடியார்களாகிய நாங்கள் எண்ணில்லாத யுகங்களாகச் சூரன் முதலிய அசுரர்களால் துன்பப்பட்டு ஒடுங்கினோம். அடியேனுடைய புதல்வனாகிய சயந்தனும் தேவர்களும் அரம்பையர்களும் சூரனால் சிறைப்பட்டு வருந்தி வாடுகிறார்கள். அரக்கர்கள் விண்ணுலகத்தை அழித்தார்கள். இவையெல்லாம் தேவரீர் அறியாததோ?

சீகரமறிகடல் சென்று நவ்விசேர்
காகம தென்னவுன் கயிலை யன்றியே
ஏகவோர் இடமில்லை எமக்கு நீயலால்
சோகம தகற்றிடுந் துணைவர் இல்லையே.

—(தொடரும்)



# புதுப்பட்டி மாரியம்மன்

புலவர் ச. சோமசுந்தரம், எம்.ஏ.,பி.எட்.

நாமமுறும் நலமிகுந்த
நாமக் கல்லை
நன்முறையில் ஆட்சிசெய்த
நவாபு, எல்லை
சேமமுறப் படைவீடு
அமைக்க நன்கு
சீர்படுத்த மண்வெட்டி
கொண்டு வெட்ட

ஏமமுறக் கல்லுருவில்
காட்சி நல்கும்
எழில்மாரி மீது மோதக்
குருதி பொங்க,
காமமுறும் எழில்மிகுந்த
நவாபின் கண்கள்
காணவொண்ணா நிலையெய்த
நடுக்கம் கொண்டான்.

அன்றிரவே நவாபின்நற்
கனவில் தோன்றி
யருள்சுரக்கும் மாரியம்மன்
''எனக்கே யிங்கு
கண்பெறவே திருக்கோயில்
கட்டு, வாழ்வில்
களிப்புறவே நான்செய்வேன்''
என்றாள் அன்னை.

அன்றிரவே ஆன்றோர்கள்
கனவில் அம்மை
அறிவித்தாள் அந்நிலையை
அறிஞர் எல்லாம்
பண்புறவே சென்றார்கள்
நவாபும் கோவில்
படைப்பதற்கே பணமளித்தான்
ஒளியும் பெற்றான்.

அருகிருக்கும் வளமிகுந்த
ஐந்தூ ராரும்
அதிசயத்தை யறிந்தார்கள்
கண்ணில் நீரும்
பெருகியிருக்கும் உணர்வலையால்
பொருளும் தந்தார்
திருப்பணிகள் செய்வதற்கே
விரைந்தும் வந்தார்

அருகிருக்கும் எழில்மிகுந்த
வெள்ளைக் கற்கள்
ஆர்வமுடன் கொணர்ந்திங்கு
புகழின் சொற்கள்
பெருகிருக்கத் திருக்கோயில்
அமைக்க லுற்றார்
பேரன்பால் பூசனைகள்
செய்ய லுற்றார்

சார்பெற்ற மஞ்சுதவழ்
மலைகள் சூழும்
ஏர்பெற்ற கழனிமிகும்
விளைச்சல் மேவும்
சீர்பெற்ற புதுப்பட்டி
மூதூர் வாழும்
பேர்பெற்ற துலுக்கர்தம்
நவாபு போற்றும்

தார்பெற்ற அருள்மாரித்
தாயே உன்னைத்
துலுக்கச்சூ டாமணியே
யென்பார் கண்ணைப்
பார்போற்ற ஒளிதந்து
காப்பாய் நன்றே
பயன்வாவில் மும்மைநலம்
தருவாய் இன்றே

கண்ணெனும் கல்விச் செல்வம்
கலைகளின் நுட்பம் நல்கும்
பொன்னெனும் வளங்கள் யாவும்
பொலிவுறச் செய்யும் நெஞ்சில்
தண்ணெனும் கருணை பொங்கித்
ததும்பிடச் செய்யும் ஞானப்
பண்ணெனும் வண்டே சூழும்
புதுப்பட்டி யன்னை பதமே!

புன்னெறி சென்று பொல்லாப்
பாவங்கள் செய்யி ரென்று
நன்னெறி காட்டி நம்மை
நலமுற நாளும் காக்கும்
செந்நெறி செல்லும் தூயோர்
சேர்ந்திட நட்பை நல்கும்
பன்னெறி மலரும் எங்கள்
புதுப்பட்டி யன்னை பதமே

கண்ணிய மாக வாழ்வில்
கடமையைச் செய்வோர்க் கெல்லாம்
எண்ணிய வண்ணம் ஈந்து
இடர்களை நீங்கச் செய்யும்
திண்ணிய தியானம் செய்தால்
திருவடி நீழல் நல்கும்
புண்ணிய தலமாய்த்தோன்றும்
புதுப்பட்டி அன்னை பதமே!

தேர்புறத்த பொலிவுற்ற
கலசம் தன்னைத்
திருடுதற்கே நள்ளிரவில்
திருடன் ஏறி
ஓர்புறத்தே கலசத்தைத்
தொட்ட போதே
—ஒருவிதமாய் மயக்கமுற்றுக்
கூச்சல் போட



ஊர்புறத்தே உறங்குகின்ற
    மக்கள் எல்லாம்
ஓடிவந்து பார்த்திடவே
    செய்தாய் மக்கள்
நாற்புறத்தே சென்றவனைப்
    பிடித்து வந்து
நடுக்கோவில் மண்டபத்தே
    கட்டச் செய்தாய்.

நாணுகின்ற செயல்புரிந்த
    அவனும் மக்கள்
நடுவினிலே தான்செய்த
    தவற்றைக் கூறிப்
பேணுகின்ற துலுக்கச்சூ
    டாம ணித்தாய்
பிழைபொறுத்து மன்னிக்க
    வேண்டி நின்றான்

கோணுகின்ற நெஞ்சங்களை
    நிமிரச் செய்து
குறிப்பறிந்து கொடுக்கின்ற
    வள்ளல் அன்னை
காணுகின்ற புதுப்பட்டி
    மாரித் தாயைக்
காசினியில் புகழாத
    மக்கள் உண்டோ ?

கள்ளுண்ட களிமகன்தான்
    ஒருநாள் போதை
கணக்கற்றுத் தலைக்கேற
    நடுங்கும் கால்கள்

தள்ளுண்டு தடுமாற
    வந்து, கல்லா?
துலுக்கச்சூ டாமணியா?
    என்று திட்டும்

சொல்லுண்ட வசைமாரி
    பொழிந்து சென்று
கற்கொண்ட பாழ்கிணற்றில்
    வீழ்ந்தி றந்த
சொல்லொன்று கேட்டார்கள்
    அன்னை தன்னைத்
தாரணியில் புகழாத
    மக்களில்லை...

பொய்கையிலே நீந்திவரும்
    அன்னம் போலப்
பூத்துவரும் தைமகளின்
    கடைசி செவ்வாய்
எய்கையிலே எல்லோரும்
    பொங்கல் வைத்துச்
செல்லாண்டி சக்திதனை
    யழைத்தே, யன்புச்

செய்கையிலே நோன்பிருந்தோர்
    வலமே வந்து
சீர்மிகுந்த சன்னதியில்
    மண்டியிட்டு
மெய்கையிலே பூபோடு
    கின்ற காட்சி
மேதினியில்கண்கொள்ளாக்
    காட்சி யன்றோ!

# வல்லக்கோட்டையில் நான் கண்ட முருகன்



**எம். வி. அரங்கநாதன்**

தாயாரின் கருவில் தோன்றி உடல் அழுக்கு-டன் அழுக்காக வளர்கிறோம். பிறகு பூமியில் தோன்றி ஆசையாகவும் நேசமாகவும் வளர்க்கப் படுகிறோம். ஆளழகனாக வளரும் போது நம்மை யொத்த இளைஞர்களோடு தோழமை கொண்டு பலவித விளையாட்டுகளில் ஈடுபட்டு விளையாடி மகிழ்கிறோம். பெண் ஆசை, பொன் ஆசை, மண் ஆசை எனும் இம்மூவாசைகளில் வீழ்ந்து புவி போகங்களுக்கென்றே அலைந்து திரிகின்ற நாம், முருகனின் பூவடிகளை அடையத்தக்க புண்ணி யங்களில் ஈடுபடுகிறோமா என்றால் இல்லை. பாழ் நரகை அடையும் வண்ணம் பாவங்களையே புரிந்து வாழும் மானிடர்களாகிய நாம் வல்லக் கோட்டை முருகனை நாளும் வணங்கி வழிபட்டால் அவனுடைய திருவடிப்பேற்றினை அடைவது திண்ணம் என்கிறார் அருணகிரிநாதர். வல்லக் கோட்டை முருகனைப் போற்றி முத்தித்தர வேண்டி அருணகிரிநாதர் பாடியுள்ள திருப்புகழ் பாடல் ஒன்றை இங்கே நான் எடுத்துக்காட்டவிழை கிறேன்.


''ஆதிமுத நாளில் என்றன் தாயுடலி லேயிருந்து
ஆக மலமாகி நின்று புவிமீதில்
ஆசையுடனே பிறந்து நேசமுடனே வளர்ந்து
ஆளழகன் ஆகிநின்று விளையாடிப்
பூதலமெலாம் அலைந்து மாதருடனே கலந்து
பூமிதனில் வேணுமென்று பொருள் தேடிப்
மோகமதிலே யுழன்று பாழ்நரகெய்தாமல் உன்றன்
பூவடிகள் சேர அன்பு தருவாயே

சிதைகொடு போகுமந்த இராவணனைமாளவென்ற
தீரனரி நாரணன்தான் மருகோனே
தேவர்முனி வோர்கள் கொண்டல்மால் அரி பிரம்
மாவும்நின்று
தேட அரிதானவன்தன் முருகோனே
கோதைமலை வாழுகின்ற நாதர்இட பாக நின்ற
கோமளிய நாதி தந்த குமரேசா
கூடிவரு சூரர் தங்கள் மார்பை இரு கூறுகண்ட
கோடை நகர் வாழ வந்த பெருமானே''

அருணகிரிநாதர் வல்லக்கோட்டைக்கு வருகை தந்த வரலாறே, அற்புதமானது. அவர் திருப் போரூர் திருத்தலம் சென்று அங்கிருக்கும் முருகப் பெருமானைக் கண்ணாரத் தரிசித்துக் களித்த பின் திருத்தணிக்குச்செல்லும் வழியில் ஒரு சோலை யில் படுத்து இளைப்பாறிக் கொண்டிருந்தார். வல்லக்கோட்டையில் கோடையாண்டவர் ஆலயம் இருப்பது அவருக்குத் தெரியாது. அயர்ந்து அவர் உறங்கிக் கொண்டிருக்கும் வேளையில் ''வல்லக் கோட்டைக்கு வர மறந்தனையோ?'' என்கிற அச ரீரி கேட்டு விழித்தெழுகிறார். அருகிலிருப்பவர் களிடம் வல்லக்கோட்டையைப் பற்றி விசாரிக் கிறார். ''ஆம்! கோடையாண்டவர் கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும் குளிர்தருவாக அருகி லிருக்கும் வல்லக்கோட்டையில் எழுந்தருளியிருப் பது உண்மைதான். ஏழடி உயரத்திற்கு முருகரும் அவருடன் கிட்டத்தட்ட அதே உயரத்திற்கு வள்ளி தேவானையரும் கூட எழுந்தருளி அருள்பாலிக்கும் திருத்தலம் அருகில்தான் இருக்கிறது. ஆனால் பழைமையான அவ்வாலயத்தை இன்று சரிவரப் பராமரிப்பார் இல்லை'' என்று அன்றும் அருண கிரிநாதரிடம் கூறியுள்ளனர். சுந்தரமூர்த்தி நாய னாரை மழபாடியீசர் ''மழபாடிக்கு வர மறந்த னையோ?'' என்று வினவி ஆட் கொண்டதைப் போலவே அருணகிரிநாதர் தம்மையும் ''வல்லக் கோட்டைக்கு வர மறந்தனையோ?'' எனறு கேட்டு ஆட்கொண்ட அன்பினை எண்ணி எண்ணி உருகி இத்தலத்திற்கு வந்துருகி வழிபட்டு ஏழு திருப்புகழ் பாக்களைப் பாடிப் பரவியுள்ளார். அவற்றில் முதல் திருப்புகழ்ப் பாடலைத்தான் மேலே கண்டோம்.

தேவர்கள் முனிவோர்கள், திருமால் பிரம்மா முதலானோரும் தேட அவர்களுக்குக் காட்சி வழங்காத சிவபெருமானே தம் அடியவர்களைத் தேடிவந்து அருள் பாலிக்கிறார். சிவபெருமானே முருகன் அல்லவா! சிவபெருமான் தம் ஆறுமுகங் களிலிருந்தும் உண்டாக்கிய அக்கினியால் அல்லவா முருகப் பெருமான் ஆறு திருமுகங் களோடு அவதரித்தார். அப்படி அவதரித்த முருகப் பெருமானும் அருணகிரிநாதரைத் தேடி வந்து ஆட் கொண்ட அருள் வரலாறு அற்புதமானதல்லவா! அன்றைக்கு அருணகிரிநாதரிடம் அப்படிப் பட்ட அற்புதம் புரிந்த முருகரே இக்காலத்திலும் தம் அடியவர்களிடத்திலும் பல அற்புதங்கள் புரிந்து வருகிறார். அடியவர்கள் அல்லாதவரிடத்திலும் பல அற்புதங்களைப் புரிந்து அவர்களையும் தம் அடியார்கள் ஆக்கி வருகிறார். நான் அறிந்த வல் லக் கோட்டை முருகரின் அருள் அற்புதம் ஒன்றை இப்பொழுது எடுத்துக் கூற விழைகிறேன்.

அருணகிரிநாதர் தம் கந்தர் அலங்காரத்தில் முருகப் பெருமானைத் தரிசிக்கத் தமக்கு நாலா யிரம் கண்களைக் கொடுக்கவில்லையே என்று பிரமனைக் குறைபட்டுக் கொள்வார். பிரம்மாவின் ஆணவம் அகல அவருடைய நான்கு தலைகளிலும் பன்னிரண்டு கரங்களாலும் குட்டியவர் முருகர். அந்தக் கோபம் காரணமாக முருகன் அடியாரான தமக்கு அதிகமான கண்களைக் கொடுக்காமல் போனார் போலும் என்ற குறிப்பும் அப் பாடலில் தொனிக்கும். அச்சுவையான பாடல் பின்வருமாறு:



வளர்ச்சி பெற்றுவரும் வல்லக்கோட்டை ஆலயத்தின் இன்றைய நிலை

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை
வானவர்க்கு
மேலான தேவனை மெய் ஞ்ஞான தெய்வத்தை
மேதியினிற்
சேலார் வயற்பொழில் செங்கோடனைச் சென்று
கண்டுதொழ
நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்
முகனே''

முருகப் பெருமானைக் காணாத கண் என்ன கண்? கண் இமைத்துக் காண்பார் தம் கண்ணென்ன கண்? என்கிற கருத்திலே திளைப்பவனாகிய நானும் வல்லக்கோட்டை முருகனை வாய்ப்புள்ள போதேல்லாம் சென்றும் கண்டும் தொழுதும் வாழ்த்தியும் என் நாட்களைப் பொன்னான நாட்கள் ஆக்கி வருகிறேன். அப்படி ஒருமுறை நான் வல்லக்கோட்டைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது எனக்கு வேண்டிய நண்பர் ஒருவரையும் நான் வல்லக்கோட்டைக்கு வருமாறு கேட்டேன். அந்நண்பர் செல்வந்தராயிருந்து வாழ்க்கையில் நலிந்தவர். வேண்டாத குடிப்பழக்கம் காரணமாக அவருக்கும் அவருடைய மனைவிக்கும் அடிக்கடி சண்டையும் சச்சரவுமாக இருந்து வந்தது. நான் அவரிடம் ''வல்லக்கோட்டை முருகனை ஒருமுறை வந்து தரிசியுங்கள். உங்களுக்கு நலம் உண்டாகும்'' என்று கூறினேன். நண்பருக்கு வல்லக்கோட்டை வர ஆசையாக இருந்தது. ஆனாலும் அவர் ''வல்லக் கோட்டைக்கு எப்படிப் போகப் போகிறீர்கள்?'' என்று கேட்டார். ''ஏன்! பஸ்ஸில்தான் போகப்போகிறேன்'' என்றேன் நான். ''பஸ்ஸில் எல்லாம் நான் ஒருநாளும் வல்லக் கோட்டைக்கு வரப்போவதில்லை'' என்று அழுத்தமாகக் கூறி என்னுடன் வர மறுத்துவிட்டார் அந்த நண்பர். நானும் அவரிடம் உறுதிபட சொன்னேன் ''நீங்கள் கண்டிப்பாக பஸ்ஸில் வந்து வல்லக் கோட்டை முருகனைத் தரிசிக்கத்தான் போகிறீர்கள். நானும் அதை நிச்சயம் பார்க்கத்தான் போகிறேன்.


ஒரு கிருத்திகை நாளன்று வல்லக்கோட்டைக்குச் சென்று முருகனை நான் தரிசித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது என்னுடன் பஸ்ஸில் வல்லக்கோட்டைக்கு வர மறுத்த அந்த நண்பரும் அங்கே இருப்பதைக் கண்டேன். ''அடடா! வாருங்கள் வாருங்கள்! வல்லக்கோட்டைக்கு என் முருகன் உங்களை வரவழைத்து விட்டான் பார்த்தீர்களா?'' என்றேன். அவரும் ''நான் பஸ்ஸில் வரவில்லை. ஆட்டோவில்தான் வந்தேன்'' என்று அங்கு நின்ற ஒரு ஆட்டோவைக் காட்டினார். பிறகு அவரே ''ஆட்டோவிற்குக் கொடுக்க என்னிடம் பணமில்லை. ஒரு 100ரூபாய் தரமுடியுமா?'' என்று என்னைக் கேட்டார். உண்மையில் என்னிடம் அன்றைய தினம் பணமும் இருக்கவில்லை. ஆகவே பணம் இல்லை என்பதை அவரிடம் தெரிவிக்க அவரும் பணத்திற்காகப் பலரிடமும் கேட்டுக் பார்த்தார். வல்லக்கோட்டை முருகன் நினைத்திருந்தால் ஒரு 100 ரூபாயை என் மூலமாகவோ அல்லது வேறு யார் மூலமாகவோ அவருக்குக் கடன் கொடுத்து உதவியிருக்க முடியும். பஸ்ஸில் வரமாட்டேன் என்று உறுதிபட உரைத்தவர் அல்லவா அந்த நண்பர். ஆகவேதான் வல்லக் கோட்டை முருகர் அவரைச் சோதித்துவிட்டார். ஆட்டோவிற்குப் பணம் தரஇயலாத நண்பரை ஆட்டோ ஓட்டுநரும் கடிந்து கொண்டு வேறொரு பயணியை ஏற்றிக் கொண்டு வல்லக்கோட்டையிலிருந்து புறப்பட்டுவிட்டார். அதற்குப் பிறகு அந்த நண்பர் நான் காணவே என்னுடனேயே பஸ்ஸில் பயணம்செய்து வல்லக்கோட்டையிலிருந்து வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றார் என்றால் வல்லக்கோட்டை முருகனின் திருவருளை என்னவென்று வியப்பது.

வல்லக்கோட்டை முருகரைத் தரிசித்தபலனை விரைவில் அந்நண்பரும் பெற்றார். குடும்பச் சச்சரவு காரணமாக அவரைப் பிரிந்திருந்த அவரது துணைவியாரும் அவருடன் இணைந்து வாழ விருப்பம தெரிவித்து அவருடைய வீட்டிற்கு வந்து விட்டார். நண்பரும் குடிப்பழக்கத்தை மெல்ல மெல்ல கைவிடுவதாக உறுதிபூண்டு அதைக் கடைப்பிடித்தும் வருகிறார். ஒரு நாள் அந்நண்பர் என் அலுவலகத்திற்கே வந்து இச்செய்திகளை எல்லாம் தெரிவித்ததோடு ''இனிமேல் நான் வல்லக் கோட்டைக்கு வருவதென்றால் பஸ்ஸிலே தான் வந்து தரிசிப்பேன். எனக்கு வசதிகள் கூடும்போதும் இந்த விரதம் நான் மாற மாட்டேன் ''என்று தெரிவித்த போது எனக்கு மெய்சிலிர்த்தது.

(தொடரும்)


சித்திர பாரதம்
கதை வடிவம்:
செவ்வேள்
படம்: M.N. ராஜா
கங்கை தன் மைந்தனுக்குத் தேவவிரதன் என்று பெயரிட்டு வசிட்டரிடம் அறிவு சாஸ்திரங்களையும், பரசுராமரிடம் ஆயுத வித்தைகளையும் கற்பிக்கச் செய்து சிறப்போடு வளர்க்கிறாள்.
பல வருடங்களுக்குப் பிறகு ஒரு நாள்... வழக்கம் போல் சந்தனு கங்கைக்கரையில் தன் மகனைத் தேடி அலைந்து கொண்டிருக்க, கட்டிளங்காளை ஒருவன் அம்புகளால் அணைகட்டிக் கங்கை வெள்ளத்தைச் சிறைப்படுத்தி விளையாடிக் கொண்டிருந்தான்.
இந்த வீரவாலிபன் என் மகனாக இருக்கக் கூடாதா?
அப்போது அங்கு தோன்றிய கங்கை "மன்னா இந்தத் தேவவிரதன் உன் மகன் தான். இவனை ஏற்றுக் கொள். நான் பிரம்மலோகம் செல்கிறேன்" என்றாள்.
தேவவிரதன் துணையோடு அஸ்தினாபுரத்தைச் சந்தனு மகிழ்ச்சியோடு ஆண்டு வருகிறான். ஒருநாள் வேட்டைக்குச் சென்ற சந்தனு காளிந்தி நதிக் கரையில் ஓர் அழகியைக் காண்கிறான்.
பரிமள கந்தம் வீசும் அழகியே! நீ யார்?
என் பெயர் பரிமளகந்தி. இவ்வூர் பரதவர் கோனின் மகள்.


எங்கள் மாமன்னர் உன் மகளை மணக்க விரும்புவது நீ செய்த புண்ணியமே பேசாமல் ஒத்துக் கொள்."
என் மகள் வயிற்றுப் பிள்ளைகள் நாடாள வேண்டும் இதற்கு இசைந்தால் அன்றி நான் இசையேன்.
தேவவிரதனுக்குத் துரோகம் இழைக்க விரும்பாத சந்தனு அஸ்தினாபுரம் திரும்பி விடுகிறான். ஆனாலும் பரிமள கந்தியின் ஏக்கத்தால் அவன் வாடி மிக நலிகிறான். நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் தேரோட்டியின் மூலமாக அறிந்த தேவவிரதன் மிகவும் சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்தான்
உம் மகள் வயிற்றுப் பிள்ளைகளே நாடாள்வர். இது சத்தியம். என் தந்தைக்கு மணம் செய்து தாருங்கள்.
உன் தியாகத்தை மெச்சுகிறேன். ஆனால் பிற்காலத்தில் உன் மக்கள் இந்நாட்டின் உரிமையைக் கேட்பார்களே!
"அந்தக் கவலை வேண்டாம். நான் காலமெல்லாம் பிரம்மச் சாரியாகவே வாழ்வேன். இது சத்தியம்.!"!
தந்தைக்காகத் தேவவிரதன் செய்த கடுமையான சத்தியத்தைப் போற்றும் வகையில் தேவர்கள் மலர்மாரி பொழிந்து" பீஷ்மர்! பீஷ்மர்!! என்று வாழ்த்தினார்கள்.



# அகிலத்தைத் திருத்த வந்த அவதாரங்கள்...

—புலவர் வ. ஞானப்பிரகாசம்

வள்ளலார் நமக்குத் தந்த மிக உயர்ந்த கோட்பாடு, 'ஆன்மநேய ஒருமைப்பாடு' என்பதாகும். உலகின் அனைத்துயிர்களையும் சரிசமமாக ஒத்த உரிமையோடு பார்த்து அன்பு செலுத்தித் தொண்டு செய்வதே இக்கோட்பாடாகும்.

''எத்துணையும் பேதமுறாது எவ்வுயிருந் தம்
உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்து உரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர்''

என்பது வள்ளலார் வாய் மொழி. உடம்பளவில் வேறுபட்டிருந்தாலும் உயிரளவில் அனைத்தும் சமமே. எனவே உயாவு தாழ்வு கருதக்கூடாது. இத்தகைய உள்ளம் நமக்கு ஏற்பட வள்ளலார் ஓர் உண்மையை உணர்த்துகிறார். எல்லா உயிரிலும் இறைவன் உள்ளிலிருந்து இயக்குகிறான் என்பதே அவ்வுண்மை. ''எவ்வுயிரும் பொது எனக் கண்டு'' என்பது அடிகளின் அருள் மொழி, இங்கு 'பொது' என்ற சொல் பொதுவானவை என்ற பொருளைத் தருவதோடு இறைவன் திருநடமிடும் இடம் என்ற பொருளையும் அது தருகின்றது. 'பொது நடத்தரசே' புண்ணியனே' எனும் திருவருட்பா இங்கு நினைவுக்குரியது, மேலும்

''உயிரெலாம் ஒரு நீ திருநடம் புரியும்
ஒருத்திருப் பொதுஎன அறிந்தேன்
செயிரெலாம் தவிர்த்தேன் திருவெலாம்
அடைந்தேன்
சித்தெலாம் வல்லது ஒன்று அறிந்தேன்''

என்பதும் பெருமான் திருவாக்கு. எனவே எல்லா உயிரினும் இறைவனைக் கண்டு இறைவனுக்குத் தொண்டு செய்வதாக நினைத்து எல்லா உயிர்களுக்கும் தொண்டு செய்ய வேண்டும்.

பிறபிற உயிர்களிடம் முதலில் சாதாரணமாக மனம் வேறுபட்டாலும், இறைவடிவாகப் பார்க்கும்போது மனக்குற்றங்கள் நீங்குகின்றன. மேன்மை வருகின்றது. இதனையே அடிகளார் ''செயிரெலாம் தவிர்த்தேன் திருவெலாம் அடைந்தேன்'' எனக் குறிப்பிடுகின்றார்.

சுவாமி சிவானந்தரும் இந்த ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வை முழுமையாகக் கொண்டொழுகினார். வள்ளலாரைப் போலவே அனைத்து உயிரிடத்தும், அனைத்துப் பொருளிடத்தும் இறைவனைக்கண்டு வணங்கினார்.

ஒரு சமயம் ஆசிரமப் பொதுக் காரியதரிசி சுவாமி கிருட்டிணானந்தஜியிடம் சுவாமி சிவானந்தர், ''நான் முதலில் கங்கையை வணங்குகிறேன். பின்னர், இமயமலையை, பிறகு கதவை, ஜன்னலை மலம் கழிக்கும் சாதனத்தையும் வணங்குகிறேன்'' என்று கூறினார்.

இத்தகைய பரந்த அன்பின் காரணமாக எந்த ஒரு உயிரும் இன்னலுற்றால் அதை அவரால் கண்டு சகிக்க முடியாது. கங்கை நீரில் ஏதாவது பூச்சிகள் உயிருக்குப் போராடி மிதந்து வருமானால் உடனே அவற்றைக் கையில் ஏந்தி வெளியில் விட்டுவிடுவார்.

சுவாமி சிவானந்தர் இறைவனை மனிதர்களிடம் மட்டுமின்றி மிருகங்கள், புழு பூச்சிகள் மற்றும் உயிரற்ற பொருள்களிடத்தும் கண்டு வணங்குமாறு வலியுறுத்தினார். '' நீங்களும் இதைப் பயிற்சி செய்து பாருங்கள். சில மாதங்கள் பயிற்சிக்குப் பிறகு உங்களிடம் ஏற்படும் மாற்றத்தைக் கவனியுங்கள். நீங்கள் மாறிய மனிதராகத் தென்படுவீர்கள். இறை மனிதராகத்தோற்றமளிப்பீர்கள்'' என்று அறிவுரை கூறினார்.

''அனைத்திலும் ஆண்டவனைப் பார்'' என்பது அவரது முக்கியமான போதனை மட்டுமன்று; அதன் அடிப்படையில் வாழ்ந்து காட்டிய பெருமையும் அவரைச்சாரும்.

ஒரு சமயம் ஆசிரமத்தில் ஈக்கள் அதிகமாக இருந்த போது சுகாதார ஆய்வாளர் ஈக்களை ஒழிக்க ஒரு மருந்தைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். அதற்குச் சுவாமி, ''அது பூச்சிகளை வராமல் செய்ய வேண்டுமே ஒழிய அவற்றைக் கொல்லக் கூடாது'' என்று அறிவுறுத்தினார்.

ஓர் இரவில் சத்சங்கம் நடந்து கொண்டிருந்த போது ஒருவர் டார்ச் விளக்கின் முனையால் தேள் ஒன்றை நசுக்கினார். அதைக் கண்ட சுவாமி மிகவும் சினந்தார். ''ஒரு தேளைக் கொன்றதனால் உலகத்தில் தேளே இல்லாமல் நீங்கள் ஆக்கிவிட்டீர்களா? கோடிக் கணக்கான மக்களை நீங்கள் தேள் கடியிலிருந்து காப்பாற்றி விட்டீர்களா? ஓடி அதைக் கொல்ல உங்களுக்கு ஒருசில விநாடிகளே ஆயிற்று. உங்களால் அதற்கு மீண்டும் உயிரைக் கொடுக்க முடியுமா? உயிரைக் கொடுக்க முடியாத உங்களால் எப்படி ஒன்றின் உயிரை எடுக்கமுடியும்? பயங்கரத்தேள் நீங்கள் தான். தேளுக்குக் கொடுக்கில் மட்டும்தான் விஷம். ஆனால் உங்களுக்கு உடல்

முழுவதும் விஷம். பொறாமை, கோபம் போன்ற எத்தனை தீய குணங்கள் உங்களிடம் நிரம்பியுள்ளன. உங்களை இப்பொழுது நசுக்கித் தள்ள வேண்டும்.'' என்று சினந்து மொழிந்தார்.

1949ல் ஆசிரமத்தில் ஒரு பீரோவில் கம்பளம் ஒன்றின் கீழ் ஓர் எலி குஞ்சி பொரித்திருந்தது. இதனை அன்பர் சொல்ல அறிந்த சிவானந்தர் எலிக்குத் தொந்தரவு இல்லாமல் அப்படியே இருக்கச் செய்து விட்டார். சில நாட்களில் பூனை ஒன்று தாய் எலியைக் கொன்று விட்டது. எலிக் குஞ்சுகளும் இறந்து போயின. அது கண்டு சிவானந்தர் மிகவும் மனம் வருந்தி அவற்றின் ஆன்மா சாந்தி அடையவெகு நேரம் மஹாம்ருத்யுஞ்ஜய மந்திர ஜெபம் செய்தார்.

சுவாமி சிவானந்தர் துறவுகொளும் முன்பே, இளம் பருவத்திலேயே அடர்ந்த காடுகளுக்குள் ஓம் என்று முழங்கியவாறு தனியே செல்வார். புலி, கரடி போன்ற கொடிய விலங்குகள் எதிர்ப் பட்டால், இறைவனை நேரில் காண்பது போல் எண்ணி அவற்றை வணங்குவார். அவைகளும் இவருக்கு எவ்வித ஊறின்றி அப்பால் செல்லும்.

உத்தரகாசியைச் சேர்ந்த சுவாமி தபோவனஜி ஒரு பொழுது அனுப்பிய சுவாமி சிவானந்தரின் பிறந்த நாள் வாழ்த்துச் செய்தியில், ''இவரைப் பற்றி நினைக்கையில் நூலறிவு, ஞானம், பல்வேறு பணிகள் போன்ற எல்லாவற்றைக் காட்டிலும் இந்த 'சர்வாத்தமபாவம்'' என்ற அனைத்திலும் ஆண்டவனைக் காணும் தன்மையே என் நினைவில் மேலோங்கி நிற்கிறது.'' என்று குறிப்பிடுவது நினைவு கொள்ளத் தக்கது.

அகங்கறுத்து புறத்தே மட்டில் மனிதர்களாக வாழ்கின்ற மனிதர்களைத் திருத்தி சன்மார்க்க நெறியில்சேர்த்து அவர்களை உய்விப்பதற்காகவே வள்ளலார் திரு அவதாரம் செய்தார்.

''அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்து அடைவித்திடஎவரும்
இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடுதற் கென்றே எனை இந்த
உகத்தே இறைவன் வருவிக்க உற்றேன் அருளைப் பெற்றேனே''

என இதனை அடிகளே எடுத்து மொழிந்தார்.

சுவாமி சிவானந்தரும் தம் வாழ்நாளில் பல தீயவர்களை மாற்றி நல்லவர்கள் ஆக்குவதையே உயர்ந்த தொண்டாகச் செய்து வந்தார். ''குண்டர்களைப் பற்றிய என் கருத்து'' என்ற தலைப்பைக் கொண்ட ஒரு பாடலில், ''நல்லவர்களிடம் ஏற்கனவே நல்ல குணங்கள் இருக்கின்றன. குண்டர்களைத்தான் திருத்தி நான் நல்லவர்களாக்க வேண்டும். அதுவே எனது சிறப்பான வேலையாகும்' என்று எழுதினார்.

சென்னையிலுள்ள ஓர் அன்பருக்கு சுவாமி எழுதிய மடலில், ''என்னை நிந்தித்து, அவதூறே பேசி வைது, தூற்றுபவர்களையே என்னைச்சுற்றிலும் இருக்க நான் விரும்புகிறேன். அவர்களுக்குத் தொண்டு செய்யவும், பயிற்சி அளிக்கவும், அவர்களை மாற்றி அமைத்து மேலோர்களாக்கவும் நான் விரும்புகிறேன்''. என்று குறிப்பிட்டார்.



## இருளகல, ஒளி பிறக்க தினந்தோறும் திருவிளக்கேற்றுங்கள்.

பல பாவிகளைத் தெரிந்தே அவர் தமது ஆசிரமத்தில் இருக்க அனுமதித்தார். அவர்களை மகான்களாக மாற்றியும் அமைத்தார். தீயவர்களை ஆசிரமத்தில் அனுமதிக்கக் கூடாது என்று சிலர் வாதாடிய பொழுது அவர், ''நான் அவர்களை இங்கே அனுமதிக்காவிடில் அவர்கள் எங்கே போவார்கள். உலகத்தவர் ஒதுக்கியதால் தானே அந்த உலகம் லாயக்கில்லை என்று அவர்கள்மிகுந்த நம்பிக்கையுடன் இங்கே வந்திருக்கிறார்கள். இங்கே நானும் வெறுத்தொதுக்கினால் அவர்களுக்குப் புகலிடம் ஏது? ஆசிரமத்தில் அவர்கள் பாவம் செய்வதற்கான வாய்ப்புகள் குறைவு. நான் திரும்பவும் உலகத்துக்குள் அவர்களை அனுப்பினால் அவர்களால் உலகத்தவர்க்கு மேலும் பல சொல்லொணாத் தீங்குகள் ஏற்படும்'' என்று சொல்லி அவர்களைச் சமாதானப்படுத்தினார்.

''ஏதிலார் குற்றம் போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு''

என்பார் வள்ளுவர். பொதுவாகத் தன் குற்றத்தை நினைத்துப் பார்க்காமல் பிறர் குற்றத்தை மட்டும் பார்ப்பதே மனித இயல்பு. ''ஒவ்வொருவரிடத்தும் பிறர் அறியாத சில இரகசியமான பாபங்கள் உள்ளன' என்பதை உணர்ந்தவர் சிவானந்தர்.

தவறு செய்த ஒரு பெண்ணை மற்றவர்கள் அடிக்க முற்பட்டபோது, ஏசுநாதர் அவர்களைத் தடுத்து நிறுத்தி, 'உங்களுள் யாரேனும் குற்றமே செய்யாதவர் இங்கு இருந்தால் அவளை அடியுங்கள்' எனச் சொன்னபோது அவரவரும் கையிலிருந்த கல்லைக் கீழேயெறிந்து நாணத்தோடு திரும்பினர் என்ற செய்தியைப் பைபிள் பகரும்.

''பாபத்தை வெறுங்கள்; பாபியை அல்ல'' என்று சுவாமி சிவானந்தர் அடிக்கடி குறிப்பிடுவார். ''இன்றைய பாபி நாளைய மகாத்மா'' என்பதும் சுவாமிகளின் மற்றொரு கருத்து. குற்றம் உடையவர்களை அவர்களது குற்றத்தையே சொல்லி மேலும் மேலும் மனத்தைப் புண்படுத்தாமல், பலர் முன்னிலையில் அவர்களை மிகவும் நல்லவர்களாகப் பாராட்டி மொழிவதன் மூலம் அவர்களைத்தாமே திருந்தச் செய்தது சுவாமியின் சீரிய திறனாகும்.

எடுத்துக்காட்டாக, சீறிவிழுபவனைப் பார்த்து உங்களைப் போல் சாந்த மூர்த்தியைக் காண்பது அரிது என்று பாராட்டுங்கள். அதைக் கேட்டுக் கேட்டு அவன் உண்மையாகவே சாந்தமூர்த்தியாக மாறிவிடுவான். சோம்பேறியை, ''நீங்கள் அற்புத மான தொண்டர்' என அடிக்கடி புகழும்போது, அவன் உண்மைத் தொண்டனாகவே ஆகி விடு வான் என்பார்.

''குருதேவர் செய்த அற்புதங்களில் எல்லாம் தலையாயது அவர் கசடரைக் கல்விமானாகவும், முரடரை முனிவராகவும், மட்டியை மகானாகவும் பாபியை பக்தி மானாகவும் மாற்றி அமைத்ததா கும். அது காலில் மிதிபட்டுக் கேட்பாரற்றுக் கிடந்த கல்லை விக்கிரமாகப் பலர் ஆலயத்தில் வழிபடும் நிலைக்கு உயர்த்தியதற்கு நிகராகும்'' எனச் சுவாமிகள் வரலாற்றை எழுதிய பேராசிரியர் திரு டி.கே. நாராயணன் குறிப்பிடுகிறார்.

சுவாமியின் இத்தகைய தொண்டிற்குச் சிகர மான ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம்.

1950ம் ஆண்டு ஜனவரி 8ம் நாள் ஆசிரமத் தில் மாலை சத்சங்கம் நிகழ்ந்து கொண்டிருந்தது. அரிக்கேன் விளக்கு வெளிச்சம் மட்டும் தான். கோவிந்தன் என்ற பெயருடைய முரடன் ஒருவன் கோடரி ஒன்றினால் சுவாமியின் தலையில் மும்முறை தாக்கினான். ஆனால் குறிதவறி சுவற்றிலும் கதவிலும் அவனது கோடரி மோதியது. வழக்கத்திற்கு மாறாக சிவானந்தர் அன்றைக்கு மட்டும் தலைப்பாகை அணிந்து வந்த தால் தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று. அன்பர்கள் அம்முரடனைப் பிடித் துக் கட்டினர். காவலர் அழைக்கப்பட்டனர். ஆனால் சுவாமி அனைத்தையும் தடுத்து, அம்முர டனின் நெற்றியில், திருநீறும் குங்குமமுமிட்டு நிறைய புத்தகங்களை அன்பளிப்பாகத் தந்து, எட்டெழுத்து மந்திர உபதேசம் செய்து, உடை, போர்வை, பழம் முதலியவெல்லாம் பரிசாகத் தந்து அவனது சொந்த ஊருக்கு 'டிக்கெட் எடுத்துத் தந்து ஆக்ரா வரை அவனது பாதுகாப்புக்காக இரண்டு ஆசிரமவாசிகளையும் அனுப்பி வைத் தார்.

பெரிய புராணத்தில் வரும் மெய்ப்பொருள் நாயனார் வரலாறு இங்கு நினைக்கத் தக்கது. தம்மைக் கத்தியால் குத்திக் கொன்ற தம் பகை வன் முத்த நாதனையும், தத்தன் என்ற மெய்க் காவலன் வெட்டமுற்பட்ட போது 'தத்தா நமர்' எனத்தடுத்து நிறுத்தி, அப்பகைவனுக்கு எவ்வித ஆபத்தும் நேராதபடி ஊர் எல்லை வரை கொண்டு போய் விடச் செய்து, அதன்பின் உயிரை விட்டவ ரன்றோ மெய்ப்பொருளார்.

நான்மறைகளுள் நடு மறையாம் யசுர் வேதத் தின் நடுவே அமைந்த ஸ்ரீருத்திரம் எனும் பகுதியில் ''தஸ்கராயநம, தஸ்கராணாம் பதயே நம'' என இறைவன் துதிக்கப் பெறுகிறார். தஸ்கரம் என் றால் திருட்டு. 'கள்வனாக விளங்குகின்ற இறை வனே உனக்கு வணக்கம். கள்வர்கட்கெல்லாம் தலைவனே உனக்கு வணக்கம்' என்பது அம்மறை மொழியின் பொருள்.

இம்மறையின் பொருளைச் சுவாமி சிவானந் தர் அங்குச் சூழ்ந்திருந்தோருக்கு நினைவு படுத்தி, எங்கும் நிறைந்த இறைவன், திருடர், முரடர், கொலைகாரர் போன்றவர்களிடமும் இருக்கிறார் என்று அறிவுறுத்தினார்.

## உடன்பிறந்தாரும் நண்பர்களும்

**தானாடா விட்டாலும் சதை ஆடும் என்பது பழமொழி. இப்பழமொழிக்கு மாறாக உடன் பிறந்தாருக்கே கேடு சூழும் சகோதரர்களும் உலகில் பலபேர் உண்டு. உடலுடன் பிறக்கும் நோயைப் போன்றவர்கள் உடன் பிறந்த சகோதரர்களும், சுற்றத்தார்களும் என்று கூறும் ஔவையார் அத்தகையவர்களைவிட நல்ல நண்பர்களே மேலானவர்கள் என்று கூறி ''உடன் பிறந்தே நோய் கொல்லும்; எங்கோ மலையிலுள்ள மருந்தே அந்த நோயைத் தீர்க்கிறது. அம்மருந்தைப் போன்றவர்களே நல்ல நண்பர்கள்'' என்று பாடியுள்ள கருத்தமைந்த பாடல் வருமாறு:**

**''உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா<br>உடன்பிறந்தே கொல்லும் வியாதி-உடன்பிறவா<br>மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்<br>அம்மருந்து போல் வாரும் உண்டு''.**

**—மூதுரை.**

''பகைவனுக்கும் அருள்வாய் நன் னெஞ்சே'' என்று பாடுவார் மகாகவி பாரதியார்

''பகை நட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்<br>தகைமைக்கண் தங்கிற்று உலகு''<br>என்பார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

பகைவனிடத்துள்ள பகைமையை மாற்றி நண்பனாக்கிக் கொள்வதே சிறந்த பண்புடைமை.


இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம் முதலான பிற அவதாரங்களுக்கு இல்லாமல் முருக அவதாரத் திற்கு மட்டுமே உள்ள தனிச்சிறப்பு, முருகன் தன் பகைவன் சூரபதுமனை அழிக்காமல் அவன் ஆண வத்தை மாற்றி, அன்பனாக, சேவலும் மயிலுமாக மாற்றிக்கொடியாகவும்ஊர்தியாகவும் கொண்டதே ஆகும்.

''தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்<br>தூயவராகி மேலைத்தொல்கதி அடைவர் என்கை ஆயவும் வேண்டும் கொல்லோ''<br>எனப்பாடினார் கச்சியப்பர்.

தன்முன வந்தவர்களெல்லாம் அஞ்சி நடுங்கு மாறு வாழ்ந்த அவனே, ''சேவலும் மயிலும் போற்றி'' ''குக்குடம் வாழ்க; செவ்வேள் ஏறிய மஞ்ஞை வாழ்க''(குக்குடம்-சேவல்; மஞ்ஞை-மயில்) என அன்பர்கள் போற்றி வாழ்த்துமாறு புனிதம் பெற்று விடுகிறான்.

அங்ஙனமே தம் முன் வந்த பாபிகளையும் மகாத்மாக்களாக மாற்றியவர்கள் வள்ளலாரும் சிவானந்தரும் ஆவர்.

# மீனாட்சி ஊட்டுகிறாள்!



கவியோகி மகரிசி டாக்டர் **சுத்தானந்த பாரதியார்**

சிறு வயதில் நான் மதுரை மாமா அன்பில் வளர்ந்தேன். அவர் பெரிய செல்வந்தர். பாஸ்கர சேதுபதி, அறிஞர் ஜம்ப்ரோ இருவருக்கும் தோழர். ஜம்புரோ எனக்கு ஆங்கிலம் கற்பித்தார். சேதுபதியின் அன்பைப் பெற்ற தெய்வ சிகாமணிப் புலவர், வேம்பத்தூர் பிச்சு ஐயர் இருவரும் தமிழ் புகட்டினர்.

மாமாவுக்கு இரண்டு மனைவிகள் கட்டியும் குழந்தை இல்லை. என்னையே தமது குழந்தையாகத் தத்தெடுக்க முனைந்தார். என் அம்மா சம்மதித்தாள். மாமா தமது பெட்டகத்தைத் திறந்தார். அதில் பொன்னும் மணியும் அணியும் பொலிந்தது. எனக்கு ஒரு செடிப் பவுன்மாலை காட்டினார்.

''பார்த்தாயா-''ஜிலு ஜிலு'' தங்கம் வைரம் ரத்தினம் பளபளபள'' இதெல்லாம் உனக்கே தருவேன்.

நான்: இதெல்லாம் எங்கே கிடைத்தது, எப்படி?

மாமா: எல்லாம் நான் ஈட்டிய செல்வம் உனக்கே தருகிறேன்.

நான்: எனக்கு எதற்கு மாமா? எல்லாம் ஏழைகளுக்கு தந்தால் புண்ணியம்

மாமா: சீ. அதிகப்பிரசங்கி, பேசாமல் என்பிள்ளையாயிருடா....

நான்: நான் மதுரை மீனாட்சியின் பிள்ளை.

மாமா: மீனாட்சிதான் உனக்குச் சோறு போடுகிறாளா?

நான்: ஆம் எனக்கு, உனக்கு, எல்லா உயிர்களுக்கும் ஊட்டும் தாய் மீனாட்சியே.

மாமா: அகராதி பேசாதே. என் பிள்ளையாயிரு. ஜம்புரோதுரையிடம் படித்து அமெரிக்கா சென்று படித்து பெரிய செல்வப் புலவனாவாய். உடனே சொல், என் பிள்ளையாக இருப்பாயா? அகராதி பேசுவாயா?

நான்: நான் மீனாட்சியம்மன் பிள்ளையே..வேறு பேச்சில்லை

மாமா: அப்படியானால் போ போ மீனாட்சியம்மனிடம், அவள் எப்படிச் சோறுபோடுகிறாள் பார்ப்போம். போடா, போ, போ.

''அம்மா தயாபரி மீனாட்சி'' என்று அழுது கொண்டே கோவிலுக்கு நான் ஓடினேன். மாலை 4.50 இருக்கும். சந்நிதியில் யாரும் இல்லை. அம்மன் திருவடியில் வேசற்று அம்மா என்று விழுந்தேன். விம்மினேன். ஏதோ என்னுள் ஒளிமினுக்கி எழுந்தது. நாக்கில் தமிழ்த் தேன் ஊறியது. பாட்டு வந்தது.

அம்மா பரதேவி தயா பரியே
சும்மா உலகின் சுமை யாக இரேன்
எம்மாத் திரம் உன் பணியிங் குளதோ
அம்மாத் திரம்வைத் தடிசேர்த்தருளாய்
வேதாகம ஞான விளக்கொளி நீ
பாதா ரமலர் பணிசெய் எனைஆள்
ஆதாரமும் நீ ஆதேயமும் நீ
மாதா ஜயஒம் மதுராம்பிகையே

என்று பாடிக் கொண்டே அம்மன் திருவடியிலே நெற்றியை வைத்திருந்தேன். என்னிடம் அன்பு கொண்ட தேவேந்திரபட்டர் என்னைத்தூக்கிச் சுந்தரேசர் சந்நிதிக்கு நடந்தார். அங்கே நான் மெய்ம்மறந்து பாடிக் கொண்டிருந்தேன். அன்று ஒரு செல்வர் உபயம். வடை, பாயாசம், லட்டு எனக்கும் இட்டு உண்ணச் சொன்னார் குருக்கள். நான் வடை சாப்பிடும்போது மாமா தமது சேவக னுடனே நுழைந்தார். மாமா ''மீனாட்சி எனக்கு ஊட்டுகிறார் நீயும் சாப்பிடு'' என்றேன். மாமா கண்ணீர்விட்டு அழுதார். ''தெரியாமல் சொன்னே னடா. ஆம். மீனாட்சிதான் நமக்கெல்லாம் ஊட்டு கிறாள். பரதேவித்தாயே! கண்ணைத் திறந்தாய். கருணைக் கடலே ''என்று ஓடிச் சென்று மீனாட் சியை வணங்கி ''உன்பிள்ளை இவன்'' என்றார். அன்றுமுதல் வாழ்வு மீனாம்பிகைப் பாட்டே பணி யாகிப் பிற்காலம் பாரதசக்தி மகாகாவிய மாகிப் பரிசு பெற்றது.

அன்னை மீனாட்சி அருளால் நமது சைவ வைணவச் சமயநல்நூல்கள் பலதோன்றி உள்ளன. பெரியபுராணமும் திருவிளையாடல் புராணமும், கந்தபுராணமும், தேவார திருவாசகங்களும் நமக்குள்ளன. தாயுமானவர் பட்டினத்தார், அருட் சோதி வள்ளலார் பாடல்கள் உள்ளத்தை அள்ளும் தெள்ளறிவூற்றுகவி. இவ்வளவிருந்தும் பொது ஜனங்கள் சமயயுணர்வை வளர்க்க வழி செய்யாதிருக்கிறோம். கிருபானந்தவாரியார் குரலே நம்மை வெண்கலமணிபோல, கிணீர் என எழுப்புகிறது. பல குரல்கள் முழங்கவேணும்.

எல்லாரும் இன்புற்று
இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று
அறியேன் பராபரமே
அன்பர் பணிசெய்ய எனை
ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்ப நிலை தானேவந்
தெய்தும் பராபரமே
எங்கெங்கே பார்த்தாலும்
அவ்வுயிருக்கு அவ்வுயிராய்
அங்கங்கிருப்பது நீ
அன்றோ பராபரமே
பாராயோ என்னை முகம்
பார்த்தொருகால் என்கவலை

தீராயோவாய் திறந்து
செப்பாய் பராபரமே
என்புருகி நெஞ்சம்
இளகிக் கரைந்து கரைந்து
அன்புருவாய் நிற்க
அலைந்தேன் பராபரமே

இவ்வாறே எண்ணி இசைத்து இருவிகற்பற்ற புண்ணியநிலை காணவேண்டும். அதுவே நமக்குப் புகழ். இந்த உலகில் நாம் காணவேண்டியவை என்ன?

நல்லவர் திருக் கூட்டம்
ஓங்க வேண்டும்
உலகில் ஞானஒளி

## நால்வகைத் தோற்றமும் எழுவகைப் பிறப்பும்

ஆன்மாக்கள் நல்வினை தீவினை என்னும் இரு வினைக்கு ஈடாக நால்வகைத் தோற்றமும், எழு வகைப் பிறப்பையும் உடையன.

நால்வகைத்தோற்றம்

அண்டசம்-முட்டையில் தோன்றுவது
சுவேதசம்-வேர்வையில் தோன்றுவது
உற்பிச்சம்-வித்து வேர் கிழங்கு முதலியவை
களை மேற்பிளந்து தோன்றுவன

சராயுசம்-கருப்பையில் தோன்றுவன

எழுவகைப்பிறப்பு:

தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் ஆகும்.

கருப்பையில் தேவர்கள், மனிதர்கள் பிறப்பர். நாற்கால் விலங்குகளும் பிறக்கும்.


முட்டையில் பறவைகள், ஊர்வன, நீர்வாழ்வன பிறக்கும்.

வேர்வையில் கிருமி, கீடம், பேன் முதலிய சில ஊர்வனவும், விட்டில் முதலிய சில பறவை களும் பிறக்கும்;

வித்து, வேர், கொம்பு, கொடி கிழங்குகளி லிருந்து தாவரங்கள் பிறக்கும்.

---

வீசவேண்டும்.
நாடெல்லாம் கல்வி, கலை
செல்வத் தொழில் வளமை
நாடோறும் ஓங்கவேண்டும்;
பொல்லாத கோள்பொய்
பொறாமை நோயுடன் மதப்
போராட்டம் ஒழிய வேண்டும்
பூமியை இரத்த களம்
ஆக்கிடும் அரக்கர் குலம்
பூண்டோடு மாற வேண்டும்
எல்லாரும் சரிநிகர்
சமான சன்மார்க்கராய்
இன்புற்று வாழவேண்டும்
இன்சொல்லும் ஈகையும்
இரக்கமும் தூய்மையுடன்
இகவாழ்வில் ஓங்கவேண்டும்
வெல்லவேண்டும் வாய்மை
வீர விடுதலை வேண்டும்.
விஞ்ஞானம் ஓங்கவேண்டும்
வேதாந்த முத்தியும்
சித்தாந்த சித்தியும்
விரவவரு பரமகுருவே.
இன்பமே சூழ்க எல்லாரும் வாழ்க.



# அருள்மிகு பாரத்வாஜேசுவரர் ஆலயம்

எஸ். செளந்தரராஜன், எம்.ஏ.,பி.எட்.,

சென்னை மாநகரில் 500 ஆண்டுகளுக்கும் முன்னதாக தோன்றிய கோயில் ஒன்று உள்ளது. அமைதியான சூழ்நிலையில் அமைந்துள்ள அத் திருக்கோயிலின் பெயர் ஸ்ரீ பாரத்வாஜேஸ்வரர் ஆலயமாகும். புனித தலமான இக்கோயில் கோடம்பாக்கம் என். எஸ். கே. சாலை என பெயர்பெறும் ஆர்க்காட்டு சாலைக்கு அருகில் உள்ளது. வடபழனி ஆண்டவர் கோயிலுக்கு வடகிழக்கே நான்கு பர்லாங்கு தூரத்தில் உள்ளது. கோடம்பாக்கம் பவர் அவுஸ் பேருந்து நிற்கும் இடத்திலிருந்து, சிவன் கோயில் தெரு வழியாக சென்றால் இத்திருக்கோயிலை அடையலாம்.

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியின் பெயர் ஸ்ரீபாரத்வாஜேசுவரர். அம்பிகையின் பெயர் சொர்ணாம்பிகை. வேண்டிய அடியார்களுக்கு வேண்டிய அனைத்தும் ஈந்தருளும் எம் பெருமான் பாரத்வாஜேசுவரர் பெருமையை சொல்ல வார்த்தைகள் போதாது. இத்திருக் கோயிலின் வரலாறு மிகப் பழமை வாய்ந்தது.

சென்னை நகரும் அதைச் சுற்றியுள்ள இடங்களும் தொண்டைநாடு என வழங்கப்பட்டு வந்தது என்பதை யாவரும் அறிவர். காஞ்சி மாநகரை தலைநகரமாகக் கொண்டு அரசாண்ட பல்லவ மன்னர்கள் இந்நாட்டை 24 கோட்டங்களாகப் பிரித்து ஆண்டனர் என்பதை சரித்திர வாயிலாக அறியலாம். அவற்றுள் இரண்டாவது கோட்டமாக அமைந்திருந்தது புலியூர் கோட்டம்! அப்புலியூர் கோட்டத்தின் தலைநகர் புலியூர். குன்றத்தூரில் வாழ்ந்த சேக்கிழார் சுவாமிகளைப் பற்றி குறிப்பிடும்போது, குன்றத்தூரும் இப்புலியூர் கோட்டத்தைச் சேர்ந்திருந்தது என்ற குறிப்பு காணக்கிடக்கிறது. பழம் பாடல் ஒன்றில்

''நாலாறு கோட்டத்துள் புலியூர் கோட்டம்', எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தப் புலியூர் தான் இன்று கோடம்பாக்கம் என பெயர் பெற்றுள்ளது எனத் தெரியவருகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த புலியூர் அதாவது கோடம்பாக்கத்தில் கோயில் கொண்டிருக்கும் பாரத்வாஜேஸ்வரர் பெருமையைப் பற்றி ஒரு புலவர் கூறுகிறார் :—

கன்னிஇளம் தமிழணங்கு களிப்பெய்தும்
தொண்டை நாட்டில் தெய்வம்
மன்னி உள திருப்பதிகள் பலவற்றுள்
மாண்பு மிகு கோடம்பாக்கம்
பன்னிருகை பரமனவன் பழகும்
வடபழனி சார்ந்த
தொன்னகராம் புலியூர் சிறப்பினை
யாம் சொல்லப்போமோ !

என்று பாடி அத்தகைய சிறப்பு வாய்ந்த புலியூரில் பாரத்வாஜேஸ்வரர் எழுந்தருளி இருக்கின்றார் எனவும் கூறியுள்ளார்.

கற்பகமாய் அடியார்களுக்கு அருள்
செய்வானே!—

என திருத்தாண்டகத்தில் கூறியுள்ளதைப் போல பாரத்வாஜேஸ்வரர் பக்தர்களின் குறைகளை நீக்கி அருள்பாலித்து வருகிறார்.

பாரத்வாஜப் பெருமான் கிழக்கே பார்க்க எழுந்தருளியிருக்கின்றார். அம்மை சொர்ணாம்பிகை தெற்கே பார்க்க காட்சியளிக்கின்றார். தெற்கு வாசலே முதன்மையான வாயிலாகப் பயன் பெறுகின்றது.

இக்கோயிலுக்குச் செல்லுமுன், கோயில் வலது பக்கத்தில் அரசமரமும் வேப்பமரமும் சூழ காட்சியளிக்கும் மகா கணபதியை வணங்கிச் செல்வோம்!

அம்மரங்களைச் சுற்றிப் பெரிய மேடை அமைக்கப்பட்டுள்ளது. காலையும் மாலையும் ஆடவரும், பெண்டிருமாகப் பக்தர்கள் இம்மரங்களைச் சுற்றிவந்து கணபதியை வணங்கிச் செல்கிறார்கள்.

பக்தர்கள் சிலர் தங்கள் குறைகள் நீங்க வேண்டும். வேண்டியது கிடைக்க வேண்டும் என்பதற்காக, சிறு துணிகளை இம்மரங்களில் கட்டியிருப்பதைக் காணலாம்.

மகாகணபதியை வணங்கிய பின்னர் கோயில் உள்ளே சென்றால், சொர்ணாம்பிகை அம்மனை தரிசனம் செய்யலாம். ஒரே இடத்தில் நின்றுகொண்டே, பாரத்வாஜப் பெருமானையும், சொர்ணாம்பிகை அம்மனையும் தரிசிக்கலாம்.

இத்திருக்கோயிலைச் சுற்றி பல தெய்வங்களின் திரு உருவங்கள் உள்ளன. நிற்கும் நிலையில் உள்ள விநாயகர், தட்சிணாமூர்த்தி, துர்க்கை, திருமால், பிரம்மா, சண்டிகேசுவரர் தரிசிக்கலாம்.

பிள்ளையார் வள்ளி தெய்வயானையோடு முருகப்பெருமான், சோமஸ்கந்தர், சிவலிங்கம், பைரவர் நவகிரகங்கள் ஆகியோருக்கு தனித் தனியே சன்னிதிகள் உ ள் ள ன.

மேலும் இங்கு ஆஞ்சநேயருக்குக் கோயில் இருக்கிறது. சிவன் கோயிலில் ஆஞ்சநேயர் இடம் பெற்றிருப்பது சமயப்பொதுமைக்கு ஒரு எடுத்துக் காட்டு எனலாம்.

அடுத்து நால்வர் மண்டபத்தைக் காணலாம். இம் மண்டபத்தின் உள்ளே சூரியன், விசுவநாதர், சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சேக்கிழார், மெய்கண்டார், அருள்நந்தி, மறை ஞான சம்பந்தர், உமாபதிசிவம் ஆகியோரது திருஉருவங்களைக் காணலாம்.

பாரத்வாஜப்பெருமான் எழுந்தருளியிருக்கும் மூலஸ்தான அறையின் முன் வாசலின் இடபுறமும் ஆதிவிநாயகரும், ஹரித்ரா கணபதியும் காட்சி யளிக்கின்றனர்.

இக்கோயிலில் விநாயகர், சோமஸ்கந்தர், தனி அம்மன், சண்டிகேசுவரர், நடராஜர், சிவகாம சுந்தரி, மாணிக்கவாசகர் ஆகிய திருவுருவங்கள் உற்சவகால மூர்த்திகளாக அமைந்துள்ளன.

பாரத்வாஜேஸ்வரர் கோயில் என அழைக்கப் படும் இக்கோயிலுக்குமுன்பு 'திருவாலீஸ்வரர்திருக் கோயில்' எனப் பெயர் இருந்ததாக சொல்லப்படு கிறது.

இராமாயணத்தில் வரும் வாலி பூசித்த நாதர் திருமயிலாப்பூர் கடற்கரையில் திருக்கோயிலாக அமைந்துள்ளதை அனைவரும்அறிவர். அந்த வாலி இங்கு வந்து சிவனைப் பூசித்ததாக ஓர் ஐதீகம். வாலி பூசித்ததால் இக்கோயிலுக்கு திருவாலீஸ் வரர் என பெயர் வழங்கப்பட்டிருந்ததாக சிலர் கூறுவர்.

பாரத்வாஜமுனிவர் இக்கோயிலுக்கு வந்து, தங்கிப் பூஜித்து வந்ததாககூறப்படுகிறது. பாரத் வாஜ முனிவர் இக்கோயிலில் உள்ள ஈஸ்வரனை வழிபட்டு வந்தமையால் இக்கோயிலுக்கு பாரத் வாஜேசுவரர் கோயில் எனப் பெயர் ஏற்பட்டதாக கூறுவர்.

இன்னொரு காரணமும் கூறப்படுகிறது. பல்ல வர்களின் கோத்திரம் 'பாரத்வாசர் கோத்திரம்' ஆகும். இக்குறிப்பு காஞ்சியில் உள்ள அருளாளப் பெருமாள் கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்றின் மூலம் அறியப்படுகிறது. இத்திருக்கோயிலைப் பல்லவர்கள் கட்டியதால், அவர்கள் சார்ந்த பாரத்வாஜகோத்திரத்தின் பெயர் இக்கோயிலுக்கு இடப்பட்டதாக கூறுவர்.

இத்கோயிலின் கருவறை விமானம், வட்ட மாக யானையின் பின்பக்கம் (கசப்பிருட்டம்) போல அமைந்து இருக்கிறது. அதனால் இக் கோவில் சோழர்களால் கட்டப்பட்டது என சில அறிஞர்கள் கருதுகிறார்கள்.

இக்கோயில் பின்னே 'திருமால்' காட்சியளிக் கும் சுவற்றின் கீழே கல்வெட்டுகள் இன்றும் காணப்படுகின்றன. ஆனால் அவ்வெழுத்துக்களை வாசிக்க இயலவில்லை.

இத்தகைய சிறப்பு வாய்ந்த-பழமையான கோயிலில் சிறப்பு அம்சங்கள் பல உள்ளன.

பாரத்வாஜப்பெருமான் எழுந்தருளியிருக்கும் கருவறை சதுரமாக இருக்கிறது. அதனால் சிவ லிங்கப் பெருமானும் சதுரமாக அமைந்து இருக் கிறார். இதன் விமானம் தனிச் சிறப்புடையது. கலை நுணுக்கங்கள் கொண்டு அழகிய சுதை வேலைப்பாடுகளுடன் காட்சியளிக்கிறது!

நாகலிங்கமரம் இக்கோயிலின் தலவிருக்ஷ மாகும். இம்மரம் மிகவும் தொன்மை வாய்ந்தது.



அருள்மிகு சொர்ணாம்பிகை

ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கும் முன்னதாக தோன்றிய மரம் எனக் கூறுகின்றனர்.

பெருமானுக்கு நாகலிங்கப் பூக்கள் நாள் தோறும் சூட்டப்படுகின்றன. நாகலிங்கப் பூக் களைப் பெறுவதற்கே பல பக்தர்கள் இங்கு வரு கின்றனர்.


இத்திருக்கோயிலில் கிராம தேவதைகள் குடி யிருந்தனர் என்றும் கூறப்படுகிறது. புலியூர் கிராமதேவதை முப்பாத்து அம்மன் இங்கு இருப்ப தாகக் கல்வெட்டு ஒன்றின் மூலம் தெரிய வருகிறது.

அடுத்த சிறப்பு இக்கோயிலில் துர்க்கைக்கு இராகு கால பூஜை செய்வதாகும். ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் மாலை 3 மணி முதல் மாலை 4.30 மணிவரை துர்க்கைக்கு விசேஷ அர்ச்சனை செய்யப்படுகிறது. திருமணம் ஆகாத கன்னியர்கள் தொடர்ந்து ஏழு வாரங்கள் துர்க் கைக்கு அர்ச்சனை செய்து வந்தால் திருமணம் விரைவில் நடைபெறும் என கூறுகின்றனர்.

*1973*-ஆம் ஆண்டு வைகாசித்திங்களில் இக் கோயிலின் திருப்பணியும், குடமுழுக்கு விழாவும் சிறப்பாக நடைபெற்றது.

இக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்த ஒரு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் கும்பாபிசேகம் நடத்துவதென்று இக்குழுவினர் தீர்மானித்துள்னர்.

வேண்டுவோர் வேண்டுவதை அளித்து வரும் பாரத்வாஜப் பெருமானையும் சொர்ணாம்பிகை அம்மனையும் வழிபட்டு, எல்லா நலன்களையும் பெறுவோமாக.




### 3. பத்துடை அடியவரின் பாங்கு

மூன்றாவது வீட்டிலுள்ள பெண் கொஞ்சம் அதிகமாகப் பேசக் கூடியவள். நம் பாஷையில் வாயாடி என்னலாம். அவள் அயர்ந்து தூங்குவது கண்டு எழுப்ப வந்த பெண்கள் தமது சினத்தைக் காட்டவில்லை. முந்தியநாள் பல் தேய்த்து நீராடித் திருநீறுபூசி வந்த தோற்றத்தை எண்ணி ''முத்தன்ன வெண்ணகையாய்'' என்று கூறி எம்மைப்புன்சிரிப்புடன் ஓடிவந்து எதிர் கொண்டு அழைக்கும் நீ தூங்கலாமா? அப்படி வந்து இறைவனைப் பற்றி ''அத்தன்: ஆனந்தன்: அமுதன்'' ஞானப்பெரும் செல்வத்தை அடைய விரும்பும் ஆன்மா குழந்தை. அத்தகைய குழந்தைக்கு ஞானத்தை வழங்கும் இறைவனைத் தந்தை (அத்தன்) என்றார். ஞானமளித்து என்றுமுள்ள மகிழ்ச்சி உண்டாகும்படி செய்தமையால் ஆனந்தன். அத்தகைய ஆனந்தத்தை அளித்த குருவான இறைவனையே அமுதன் என்று குறித்தார். அமுதுண்டவர்கள் கூட இறந்தார். நஞ்சுண்ட இறைவன் அழியவில்லை. ஏனெனில் அவனே அமுதன்; இப்படிஎல்லாம் நாவில் நீர் வருவதுபோல் பேசுவாயே! நல்ல பழத்தை கண்டபோது நாவில் நீர் ஊறும். அதுபோலவே மெய்யடியார்களுக்கு இறைவன் நாமமோ பெருமையோ பேசும் போது நாவில் நீர் ஊறும். மற்ற பெண்கள் இறைவன் நாமமும் பெருமையையும் பாடுவார். இந்தப் பெண் பேசக்கூடியவள். எடுத்துப் பேசக் கூடியவள் தூங்கலாமா? வீதிக்கு வரக்கூடியவள் கதவிற்குப் பக்கத்தில் கூட வராமல் தூங்கலாமா? ''தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்' என அழைக்கின்றனர். ''பேச்சுத்தான் பெரியதாக உள்ளது தூக்கம் அதை வென்று விட்டது'' எனக் கேலியாகப் பேசுவதாகத் தோன்றிவிட்டது அந்தப் பெண்ணுக்கு!

''அடியம்மா! நீங்களெல்லாம் பழைய பக்தர்கள்! (பழவடியீர்) சிவசின்னம் தரித்தல். குருபக்தி செய்தல், சிவத்தோத்திரம் பாடுதல், மந்திரசபம் செய்தல், சிவபூஜை செய்தல், சிவபுண்ணியம் செய்தல், சிவபுராணம் கேட்டல், சிவாலயத்தை நிர்வகித்தல், சிவனடியாரை வழிபடுதல், அடியாருக்கு அடிமையாதல் ஆகிய பத்துவிதமான பக்தி செய்யக்கூடியவர்கள்! பத்துடையீர் - முறைதவறாது ஒழுங்காக அனுட்டானம் முதலானவை செய்யக்கூடியவர்கள்; பாங்குடையீர்; நாங்களெல்லாம் புதிதாக பக்திவழியில் இறைவனையடையச் சேர்ந்திருக்கிறோம். புத்தடியோம். நாங்கள் ஏதாவது குற்றம் செய்தால் மன்னித்து ஆட்கொள்வது தீங்காகுமா? இறைவன் அல்லது அடியவர்கள் தாம் அறியாதவர்களை ஆட்கொள்ளவேணும்!'' ஆகவே ''நீங்கள்தான் என் போன்ற அறியாதவர்களை ஆட்கொள்ள வேண்டும்'' எனப் பதிலுக்குக் கேலிசெய்கிறாள் அந்த முத்தன்னவெண் நகையழகி.

திடுக்கிட்ட மற்ற பெண்கள் ''உன் அன்பு எத்தகையது என அறியமாட்டோயா? எத்தோ? ஏமாற்றக்கூடியதா? உன் அன்பு வஞ்சகமானதன்று (எத்தோ நின் அன்புடைமை. எல்லாம் அறியோமோ?) உனக்கும் நல்ல பக்தி - அன்புண்டு. (1) நாத்தழுதழுத்தல் (2) இதழ் துடித்தல் (3) உடல் குலுங்கல் (4) மயிர்சிலிர்த்தல் (5) வியத்தல் (6) சொல் எழாமை (7) கண்ணீரரும்பல் (8) வாய் விட்டு அழுதல் (9) மெய்மறத்தல் (10) மிடறு விம்முதல் என்ற பத்து குணங்களையுடைய சித்தம் அழகியவள். நீ நம் சிவனைப் பாடாது இவ்வாறு உறங்கிக் கிடக்கலாமா?'' எனக் கேட்க படுத்திருந்த அந்த பெண் ''சிவனை மறந்து உறங்கிய எனக்கு இத்தனை கேலியும் செய்ய வேண்டுவது தான்'' என எழுந்து வருகிறாள்!

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்துஎதிர்
எழுந்துஎன்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்றள்ளூறித்
தித்திக்கப்பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர்! ஈசன்பழவடியீர்: பாங்குடை
யீர்!
புத்தடியோம்! புன்மைதீர்த்து ஆட்கொண்
டாற்பொல்லாதோ?
எத்தோ நின் அன்புடைமை எல்லோம்அறி
யோமோ?
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர்எம்பா
வாய்!

திருவெம்பாவை 3.

முத்தன்ன வெண்ணகையளான மூன்றாவது பெண்ணுட்பட அனைவரும் அடுத்த வீட்டுப் பெண்ணை எழுப்புகின்றனர். 'தூங்கின மட்டும் தூங்குவோமே. எல்லோரும் வந்தபின் எழுந்தால் போகிறது' என்று உல்லாசமாகத் தூங்கும் இவள்

விஷமமான புன்சிரிப்புடன் தூங்குகிறாள். சிறிது அவள் பற்கள்கூடத் தெரிகிறது. முத்துப்போன்ற அவளுடைய வெண்மையான பற்களின் வெண்மை நிறம் தெரியத்தூங்கும் அவளை ''அம்மணி'' இன்னும் பொழுது விடியவில்லையா?'' என அழைக்கின்றனர். ''ஒண்ணித்தில நகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?'' என்கின்றனர்.

இவர்கள ''இன்னும் பொழுது விடியவில்லையா?'' என இனிமையாக கேட்கும் குரலைக் கிளியின் மொழியாக அனுபவிக்கின்றாள். இனிய சொல்லும் அழகிய தோற்றமும் உள்ள அந்தப் பெண்களை, வண்ணப் பட்டாடைகளை உடுத்துத் தன்னை அழைக்க வந்துள்ள அவர்களிடம் ''எல்லாரும் வந்து விட்டார்களா?'' எனக் கேட்கிறாள். ''வண்ணக்கிளிமொழியார் எல்லாரும்வந்தாரோ?'' ' எல்லோரும் வந்து விட்டார்களா என எண்ணி உள்ளபடி வந்தவர்களின் எண்ணிக்கையைச் சொல்லுகிறோம்! அது வரை கூடத்தூங்கிக் காலத்தை வீணாக்காதே'' எண்ணிக்கொண்டுள்ளவா சொல்லுகோம்! அவ்வளவும் கண்ணைத்துயின்றவமே காலத்தைப் போக்காதே'' என்கின்றனர்.

''மையிட்டெழுதோம் மலரிட்டுயாம் முடியோம்'' என்ற விரதங்கள் கிடையாது, நல்லாடைகளை உடுத்திக்கொண்டு அழகு செய்து கொண்டு இவ்வுலக சுகத்தையும் அனுபவித்து கொண்டு இறைவன் நாமம் பாடி வருகிறார்கள்'' என்பது குறிப்பு.

பட்டினத்தார் சொன்னார். ''உலக வாழ்வில் பல சுகங்களையனுபவித்தபோதிலும் உன் திருநாமத்தைக் கூறிக் கொண்டேயிருந்ததால் அந்த முக்தியையும் இழக்கவில்லை''. மைந்தரும் ஒக்கலும் மனமகிழ்ந்து இவ்வகை இருந்தோமாயினும்-நின் அஞ்செழுத்து எம் வாயிடைமறவாதிருந்தோம் ஆதலின் அந்த முத்தியும் இழந்திலோம்-முதல்வ! அத்திறம் நின்னது பெருமையன்றோ''-திருவிடைமருதூர் மும்மணிக்கோவை. எனவே உலகில் இன்பவாழ்வு வாழ்ந்து கொண்டே இறைவனையும் அடைந்து இன்பம் பெறலாம்'' என்றார். வண்ணக்கிளிமொழிபோல் அழகும் குரலும் உடையவர் எல்லாரும் வந்துவிட்டார்கள். அவர்கள் எத்தனைபேர் வந்துள்ளார் என்று எண்ணச் சொல்லிக் காலம்போக்குகிறாய்! அதுவரை கண்களை மூடித் தூங்கலாகுமென்றா? அம்மணி! கண்ணை மூடிக் கொண்டுஅப்பெருமானைத்தியானிக்கலாம். தூங்கக் கூடாது. ஒரு கணம் கூட அவனை நினையாமல் காலத்தைப் போக்கலாமா? அவப்பொழுதைத் தவப்பொழுதாக்க வேண்டாமாம்! அவனைபற்றிப் பேசாத நாளெல்லாம் பிறவா நாள்'' என்பது அடியார்களின் கொள்கையன்றோ?

தேவருலகம், ஏன், எல்லா உலகங்களையுமே அழிக்கப் பாற்கடலினின்றும் நஞ்சுவந்தது. அதனைத் தானே உண்டு அனைவரும் காத்த (விண்ணுக்கொரு மருந்தன்றோ அப்பெருமான்) வேதங்களுக்கு நடுநாயகமான பெயரையுடையவன். இறவாது பிறவாதிருக்கும் பெருமையுடையவன் (வேத விழுப்பொருள்). திருப்பாவையில் இராமபிரானை மனத்துக்கு இனியன் என்றாள். சிவபெருமானைக் கண்ணுக்கு இனியான் எனக் குறித்தனர். சைவம் கண்ணுக்கினிய தெய்வத்தையே வணங்கும் என்பது குறிப்பு. யோகமூர்த்தியான தட்சிணாமூர்த்தியையும் போக மூர்த்தியான கல்யாண சுந்தரரையுமே வணங்குவர். அழிவுண்டு என்பதைக்காட்டுவதற்காகக் கோரமூர்த்தியானாரே தவிர வழிபாட்டிற்கு அல்ல. இத்தகைய இனிய தெய்வத்தை இனிமையாக மென்மையாக பொருள் தெரிந்து உருகிப்பாட வேண்டும். மந்திரமாக சபம் செய்தால் கூட உருக முடியாது.



## நாய் பிறவி நல்லது

**"' அணிமலர்க் கொய்துன்**
**கழற்கிடார் பிறப்பின்**
**நாய்பிறப்பினிது "**

**—சிவப்பிரகாச சுவாமிகள்**

**புது மலரிட்டு இறைவனடி தொழாத மனிதர்களின் பிறவியை விட நாயின் பிறவி மேலானது என்பது சிவப்பிரகாச சுவாமிகளின் கருத்தாகும்.**

---

காலம் வீணாகிறது. எனவே யாம் எண்ணமாட்டோம் நீயே வந்து எல்லாரும் வந்து விட்டாரா என எண்ணிக்கொள். அப்படி எண்ணிப்பார்த்து வந்தவர் குறைவாக இருந்தால் அவர்கள் வரும் வரை மீண்டும் படுத்து பாக்கித்தூக்கத்தையும் முடித்துக்கொள்'' எனக்கூறி எழுப்பினர்.

திருச்சிற்றம்பலம்

ஒண்ணித்தில நகையாய்! இன்னம் புலர்ந்
தின்றோ?
வண்ணக்கிளி மொழியார் எல்லாரும் வந்
தாரோ?
எண்ணிக் கொண்டுள்ளவா சொல்லுகோம்
அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப்
போக்காதே!
விண்ணுக் கொரு மருந்தை வேதவிழுப்
பொருளைக்
கண்ணுக்கினியானைப் பாடிக்கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயே
வந்து
எண்ணிக்குறையில் துயிலேலோர் எம்பாவாய்

(திருச்சிற்றம்பலம்)




**கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்**

### 12. நினைத்தாலும் இனிக்கும் நல் தெய்வம்

இராமபிரானைப் பிரியாது தொண்டுசெய்து விளங்கிய இலக்குவனைக் கைங்கர்ய லஷ்மி யுடையவன் என்றார் வான்மீகி. கம்பன் அண்ண னுக்கு இளைக்காது சேவை செய்த தம்பியான இலக்குவனுக்கு இளையான் என்றே பெயர் சூட்டினான். அம்முறையில் கண்ணனுக்கு என்றும் பிரியாது சேவை செய்யும் ஒரு பாக்கியவானின் தங்கையை எழுப்புகின்றார் இப்பாடலிலே. இவன் இறைவனுக்குச் சேவை செய்யும் நற்செல்வன். இவன் வீட்டிலிருந்த எருமைகள் தங்கள் கன்றை நினைத்துக் கனைக்க அவைகளின் மடிவழியே பால் சுரந்து வீடு சேறாகிவிட்டதாம். ''கனைத் திளங்கற்றெருமை கன்றுக் கிரங்கி நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்''! வீட்டி னுள்ளே நுழையப் பால் சேறாகித் தடுக்கின்றது. வெளியே நிற்க முடியாதபடி பனிபெய்கிறது. ஆத லால் அவள் வீட்டு வாசலைப் பற்றிக் கொண்டு நின்று இறைவனைப் பாடுகின்றார்களாம். ''பனித் தலைவீழ்நின் வாசற்கடைபற்றி'' இராமபிரானைப் பாடுகிறார்களாம். தாடகை வதம் முதல் இராவண வதம் வரை அவனது தோள் வலிமையன்றோ? இராமனைப் பெற்றதால் கௌசலையின் வயிறு புகழ் பெற்றதாம். கௌசலைதன் மணி வயிறு வாய்த்தவன் என்கின்றார். இன்று போய்ப் போருக்கு நாளைவா என்று எதிரிக்கும் இரங்கின வன். இத்தகைய பெருமானை நினைத்தாலே மனம் இனிக்கும். எனவே ''மனத்துக்கு இனியான்'' என்றார். மேலே பனிவெள்ளம். கீழே பால் வெள் ளம். மனத்திலே காதல் வெள்ளம். வெள்ளத்தின் நடுவில் மிதவையைப் பிடித்துக்கொண்டு நிற்கிற மாதிரி வாசற்படியைப் பற்றிக் கொண்டு இந்தப் பெண்ணை எழுப்புகின்றனர்.

இப்பாடல் பொய்கை யாழ்வாரைக் குறிப்ப தாகக் கூறுவர். இவர் தாமரையில் பிறந்தவர். தாமரையில் பிறந்த திருமகளின் தங்கையே எனும் பொருள் பட நற்செல்வன் தங்காய் என்றார். பசு கன்றுக்கிரங்கிக் கனைத்துப் பால் சொரிவது போல் ''வையந்தகளி'' என ஆரம்பித்து நூறு பாடல் களைப் பாடினார்.

தங்காய் என்பதைத்''தன் கை''எனப் பொருள் செய்து நம்மாழ்வாரைத் தனது குருவாக எண்ணி அவரது கை போன்ற மதுரகவியாழ்வாரைப் பாடி னார் என்பர். தங்காய் என்ற விளியைக் கொண்டு ஆழ்வாராதிகளில் ஒரே பெண்ணான தன்னையே பாடி எழுப்பினாள் என்பர் சிலர். தன் பெருமை யைத் தானே பாடமாட்டார் உத்தம பக்தையான ஆண்டாள் என்பதால் இப்பாடல் மதுரகவியையோ பொய்கையாழ்வாரையோ குறிக்கும் பாசுரம் என்றே கொள்ள வேண்டும் என்பர் ஆண்டாளின் அடியவர்.

மனத்துக்கினியானைப் பாடி மனம்மகிழ ஆண் டாள் திருவடி வணங்குவோமாக!

கனைத்திளம் கற்றெருமை கன்றுக்கிரங்கி
நினைந்து முலைவழியே நின்று பால்சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன்
தங்காய்!
பனித்தலை வீழ நின்வாசற்கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச்
செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும் வாய்திற
வாய்!
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத்தாரும் அறிந்தேலோர் எம்
பாவாய்...12

### 13. கள்ளமில்லா வெள்ளை உள்ளம் கொள்வோம்!

மனத்துக்கினியான் என இராமபிரானைக் கூறியபின் இந்தப் பாடலில் இராமனையும், கண் ணனையும் ஒருங்கே பாடுகின்றனர். பகாசுரன் என்பவன் பறவையுருக்கொண்டு வர கண்ணன் அவனது வாயைப் பிளந்து கொன்றார். இதை ''புள்ளின்வாய் கீண்டானை'' எனக் குறித்தார். இராமபிரான் எதிரிலே இராவணன் வர, அதுவும் ஒரே தலையுடன் வந்தபோது தலையை அறுத்தார். நூறு முறைகள் தலைகள் முளைத்து வர நூறையும் அறுத்து, அவன் செய்த தவறுகளுக்கு அவனைச் சித்திரவதை செய்தார். கடைசியில் அகத்தியர் தந்த அம்பு கொண்டு அவனைக் கொன்றார். முளையைக் கிள்ளுவது போல மிக எளிமையாகவே தலையை அறுத்தலைக் கிள்ளிக்களைந்தான் எனக் கூறினார். இதனை நகங்கொண்டு இரணியனை கிழித்ததாகக் கூறுவர். இரணியன் அரக்கனல்ல. அசுரன். வேதகுணங்களில்லாது தேவர்க்கு எதிரி யாயிருப்பவன். இரக்கமென்ற ஒரு பொருள் இல் லாத நெஞ்சினனே அரக்கன். பொல்லாத தீங்கு நிறைந்த அரக்கன் இராவணன், சுரிகுழல் கனிவாய் திருவினைப் பிரித்து கொடுமையில் கடுவிசை அரக் கன் என்பது திருமங்கையாழ்வாரின் வாக்கு. தீதிலா இலங்கை வேந்தன் என விபீஷணனைக் குறித் தார் கம்பர். எனவே பொல்லா அரக்கன் என இராவணனையே குறித்தார் என்னலாம்.



வெள்ளி எழுவதும் வியாழம் உறங்குவதும் எல்லா வருஷமும் கிடையாது. ஆண்டாள் பிறந்த போது குரு சுக்கிரர்கள் ஒரே ராசியில் இருந்தனர் என சோதிட சாத்திரத்தின் கருத்தைச் சிலர் கூறுவர். வியாழக்கிழமை போய் வெள்ளிக்கிழமை வந்தது என்று சிலர் கூறும் கருத்து பொருத்தமாகத் தோன்றுகின்றது.

''சிறு பெண்களான உங்களுக்குச் சுக்கிர உதயம் வந்தமாதிரி தோன்றிற்றோ என்னவோ?'' என்கிறாள் படுத்திருக்கும் பெண். ''நாங்கள் இத்தனை பேரும் ஒன்றாக வந்து கூறுகிறோமே! இவ்வளவு பேருக்குமா தெரியாது'' என்று கோபியர் கூற ''நீங்கள் என்றைக்கும் பிரிவதே கிடையாதே! பிரிந்தால்தானே கூடுவது'பற்றித்தெரியும்'' என்கின்றாள் அவள். ''பறவைகளும் சத்தமிட ஆரம்பித்து விட்டனவே! புள்ளும் சிலம்பின என்கின்றனர், ''பறவைகளைக் கொண்டா இவர்கள் காலமறிந்தனர்!''என எண்ணி அவள் வாளாவிருக்க, உன் கண்ணழகின் காரணமாக நீ கர்வம் கொண்டு எம்மை அலட்சியம் செய்யலாமா? ''என்கின்றனர். போதரிக் கண்ணினாய் -(தாமரை போன்ற கண்களை உடையவளே -தாமரைக்கு எதிரி. அரி-எதிரியான அழகிய கண்களை உடையவளே! உலாவும் மான் போன்ற கண்களை யுடையவளே) அழகிய கண்களை உடைய நீ எங்களுடன் வந்து குளிர நீராடி கண்ணனை நினைக்க வருக'' என அழைக்கின்றனர். அவனை வணங்க இது நன்னாள் என்கின்றனர்.

விடியற்காலையில் நீராடவேண்டும். ஆனால் மிகமிகச் சீக்கிரமாக தீபாவளி நாள் மாதிரி நீராடக் கூடாது. தீபாவளி நாள் தவிர மற்ற நாட்கள் அவ்வளவு அதிகாலையில் நீராடுவது குற்றம் என்பர். வருடத்திற்கு ஒரு நாள்தான் சாத்திரம் அனுமதிக்கிறது என்பர்.

கங்கை (தண்ணீருக்கே பொதுப்பெயர்) தூங்குவதாகவும் பெரியோர் கூறுவர். பரதன் மிக மிக சீக்கிரமாகச் சென்று நீராடிப் பொழுது விடிவதற்கு முன் நீராடித்திரும்பினானாம். கொஞ்சம் வெளிச்சம் வந்தபின் சென்றால் கூட ''அண்ணனைக் காட்டிற்கு அனுப்பியவன் போகிறான்'' எனச் சுட்டிக்காட்டிப் பேசிவிடுவார்களோ என அச்சம் என்பர்.

இப்பாடல் தொண்டரடிப் பொடியாழ்வாரை குறிப்பதாகக் கூறுவர். இறைவனுக்கு மலர் அரிந்து அளிப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார் என்பதால் போதரி கண்ணினாய் என்றனர். பக்தியுலகத்தில் எல்லாத்தெய்வங்களையும் அரங்க நாதராகவே கண்ட கற்பு நிலையுடையவராதலால் பாவாய் பதிவிரதையே என்றனர். மார்கழி திங்களை நன்னாள் என்று ஏற்கனவே கூறியுள்ளனர். இவர் மார்கழியில் பிறந்தவர். எனவே நன்னாள் என்றனர். ''சூதனாய்க் கள்வனாகி'' என்றும் ''அரங்கந்தன்னுள் கள்வனார் கிடந்தவாறு என்றும்'' ''கள்ளமே காதல் செய்தும்'' என்றும் ''கள்ளத்தேன்'' என்றும் இவரது வாக்கில் கள்ளம் என்ற வார்த்தை அடிக்கடி வந்ததால் கள்ளம் தவிர்த்து எழுந்து வருக என்றும், இவர் தமது பாடல்களில் கண்ணனையும் இராமபிரானையும் அடிக்கடி பாடியிருப்பதால் ''புள்ளின்வாய் கீண்டான்'' என்றும் பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்தான் என்றும் சேர்த்துப்பாடினாள் என்பர்.

புள்ளின் வாய் கீண்டானை; பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப் போய்
பிள்ளைகள் எல்லோரும் பாவைக் களம் புக்கார்
வெள்ளி எழுந்தது வியாழம் உறங்கிற்று
புள்ளும்சிலம்பினகாண்:போதரிக்கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்த்து கலந்தேலோர் எம்பாவாய்

### 14. தாமரைக் கண்ணன் தாள் பணிவோம்

''உங்களை நான் வந்து எழுப்புகிறேன்'' எனக் கூறிய ஒரு பெண் வரவில்லை. அவளை மற்றவர் வந்து எழுப்பும் பாடல்இது. தன்னை எழுப்பும் பெண்களிடம் அவள் ''பொழுது விடிந்ததற்கு என்ன அடையாளம்'' என்கிறாள். ''செங்கழுநீர் மலர்கள் மலர்ந்தும் ஆம்பல் மலர்கள் குவிந்தும் உள்ளன'' என்கின்றனர். ''நீங்கள் என் இல்லத்திற்கு வந்ததால் உங்கள் முகங்களான மலர்கள் மலர்ந்துள்ளன. உங்கள் வாய்கள் மூடிவிட்டன. அதை மலர்களுடன் ஏன் சம்பந்தப்படுத்துகின்றீர்கள்'' என்கின்றாள். ''வாவியில் மலர்கள் குவிந்தும் மலர்ந்ததையும் அன்றோ கூறினோம்'' என்கிறார்கள். ''வயல்களுள் புகுந்து மலர்களை மலர்த்துவதும் மூடுவதும் உங்களுக்கு ஒரு விளையாட்டன்றோ?'' என்கின்றாள். ''அடியம்மா கட்டுக் காவல்களுடைய உன் வீட்டுப் புழக்கடைத் தோட்டத்துள்கூட மலர்கள் மலர்ந்தும் குவிந்தும் உள்ளன பார்!'' என்கின்றார்கள். ''உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள் செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின காண்'' அது மட்டுமன்று. துவராடை அணிந்த துறவிகள், வெற்றிலை முதலானவற்றை நீக்கியவர்கள், காலைக் கடன்களை முடித்துக்கொண்டு தமது ஆச்சிரமங்களில் திருவாராதனம் செய்யப் புறப்பட்டு விட்டனர் என்கின்றார்கள். ''அவர்கள் எப்போதும் தெய்வ ஆராதனை செய்து கொண்டே யிருப்பவர்கள். எனவே பொழுது விடிந்ததற்கு அது அடையாளமன்று'' என்கிறாள். எங்களை வந்து அழைக்கிறேன் என்று கூறிவிட்டு இப்படித் தூங்குகிறாயே? உனக்கு வெட்கமாயில்லை. நாணாதாய். எல்லாவற்றிற்கும் பதில் கூறுகிறாயே! என்ன நாவன்மை'' ''நாவுடையாய்'' என்கின்றனர்.

இராமாவதாரத்தில் கௌசலைக்கும் கிருஷ்ணாவதாரத்தில் தேவகிக்கும் சங்குச்சக்கரங்களுடன் நான்கு திருக்கரங்களுடன் காட்சியளிக்க, அவ்விருவரும் ''எங்களுக்குச் சாதாரணமான குழந்தையுருவில் காட்சியளிக்க வேண்டும்'' என வேண்டச் சாதாரணக் குழந்தையாக மாறி விளங்கினார் என்பது வரலாறு. குசேலர் எதிரிலும் கண்ணன் சங்கு சக்கரங்களுடன் காட்சிதந்தார் என்பர். கோபிகைகள் இத்திருக்கோலத்தில் ஈடுபட்டு பாடி வணங்கவிரும்புகின்றனர்.

இப்பாடல் திருப்பாணாழ்வாரைக் குறிக்கிறது என்பர். நங்காய்! என்ற விளிக்குப் பூர்த்தியான குணங்களை உடையவளே எனப் பொருள் காண்கின்றனர். பூரண குணமிருந்தால் தானே பூரணப் பொருளான இறைவனின் காட்சி கிடைக்கும் என்பது குறிப்பு. நாணாதாய் என்பதற்கு அகங்காரமற்றவளே என்ற பொருள்கொண்டு லோகசாரங்கர் என்ற பெரியவரின் தோள்களில் ஏறித் திருவரங்கம் பெரிய கோயிலுக்குள் வந்தவர். எனினும் தாம் எளியவர் என்பதை ''அமலன் ஆதி பிரான் அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன்'' எனப்பாடித் தன்னடக்கத்தைக் காட்டிக்கொண்டார். பத்தேபாடல்களில் இறைவனின் திருமேனியின் அழகு பூராவும் பாடிமுடித்த நாவன்மையுடையவரானபடியால் நாவுடையாய் எனக்குறித்தார். தீண்டாதார் வகுப்பிலே பிறந்த இவர் திருவரங்கத்துள்ளே செல்ல அஞ்சி, வீணையைக் கையிலேந்தி வயல்வரப்புக்களில் திரிந்ததை உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள் செங்கழுநீர் நெகிழ்ந்து ஆம்பல் வாய்கூம்பின் காண் என்பதன் மூலம்காட்டினார். ''செங்கல் பொடிக்கூறை வெண் பல் அருந்தவத்தார்'' என்பதன் மூலம் இவரைத் திருக்கோயிலுள் சுமந்த லோகசாரங்க முனிவரைக் குறித்தார். ''எங்களை வந்து எழுப்புகிறேன் என்ற நீ உன்னை நாங்கள் எழுப்பும்படி நடத்து கொண்டாயே! எங்களை முன்னும் எழுப்புவான் வாய் பேசும் நங்காய் எழுந்திராய் நாணாதாய்! என்ற பரிகாசச் சொற்றொடர் அடியவர்களை என் தோளில் சுமப்பேன் எனக்கூறுவது போல் (அடியார்க்கு என்னை ஆட்டுவித்த விமலன்) பாடி ஒரு பாகவதர் தோளிலே ஏறிக் கோயிலுக்குள் வந்தீரே என நகைச்சுவையுடன் கேட்பது போல் தொனிக்கின்றது. அடியார்க்கு நம்மை ஆட்படுத்தும் இறையருளை வேண்டுவோமாக.

உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர்வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் அருந்தவத் தவர்
தங்கள் திருக்கோயில் அலகிடுவான் போகின் றார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய்! நாணாதாய்! நாவுடை யாய்
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணனைப் பாடலோர் எம் பாவாய் 14

## ஆயுள் சந்தா செலுத்துங்கள்!

**ஆயுள் சந்தா செலுத்தாத ஆலயங்களுக்கு இனிமேல் திருக்கோயில் இதழ்கள் அனுப்பப்பட மாட்டாது. ஆகவே பட்டியல் சார்ந்த மற்றும் சாராத ஆலயங்கள் அனைத்தும் உடனே ஆயுள் சந்தா கட்டிப் பயன்பெற வேண்டுகிறோம்.**

# கம்பரின் இராமாவதாரம்



டாக்டர் த. அமிர்தலிங்கம்

தாடகையின் மார்பில் இராமபாணம் பாய்ந்து ஊடுருவ அவளுடைய மார்பிலிருந்து இரத்தம் வெள்ளம் போல் பீறிட்டுப் பாய்கிறது. பின்வாளில் நிகழப்போகும் அரக்கர்களின் அழிவுக்குக் கட்டியம் கூறுவது போல் தாடகையின் மரணமும் இந்நாளில் நிகழ்கிறது என்று வர்ணிக்கிற கம்பர், அரக்கர்களின் வெற்றிக்கொடி வீழ்வது போல் தாடகையும் வீழ்கிறாள் என்று பாடியிருக்கிறார்.

''பொடியுடைக் கானம் எங்கும்
குருதிநீர் பொங்கி வீழத்
தடியுடை எயிற்றுப் பேழ்வாய்த்
தாடகை தலைகள்தோறும்
முடியுடை அரக்கற்கு அந்நாள்
முந்திஉற் பாதம் ஆகப்
படியிடை அற்று வீழ்ந்த
வெற்றிஅம் பதாகை ஒத்தாள்''

இவ்வாறு இராமர் தாம் செய்த கன்னிப் போரிலேயே—முதல் போரிலேயே தாடகையைக் கொன்று வீழ்த்திவிடுகிறார். எமனுக்கு நீண்ட காலமாகவே அரக்கர்களின் இன்னுயிர்களை உண்ண வேண்டும் என்ற ஆசை இருந்து வந்தது. ஆனாலும் இராவணன் முதலான அரக்கர்களிடம் இருந்த பேரச்சத்தால் அவனுடைய ஆசை நீண்டகாலமாக நிறைவேறிடவில்லை. ஆனால் இராமர் தம் பாணத்தால் தாடகையைக் கொன்றுவீழ்த்திய இவ்வேளையில் அரக்கர்களின் இன்னுயிர் உண்ணும் எமனின் ஆசை ஓரளவு நிறைவேறியது மட்டுமல்ல மேலும் மேலும் அரக்கர்களின் இன்னுயிர்களை உண்ண வேண்டும் என்கிற வேட்கையும் அவனிடம் கிளர்ந்தெழுகிறது.

''வாசநாள் மலரோன் அன்ன
மாமுனி பணிமறாத
காசுலாம் கனகப் பைம்பூண்
காகுத்தன் கன்னிப் போரில்
கூசிவாள் அரக்கர் தங்கள்
குலத்துயிர் குடிக்க அஞ்சி
ஆசையால் உழலும் கூற்றும்
சுவை சிறிது அறிந்ததன்றே''

தாடகையின் மரணத்தால் எமன் மகிழ்ந்திருத்தலைப் போலவே மற்றைய தேவர்களும் மிக மகிழ்கிறார்கள். ''நாங்கள் இழந்த அமரலோக வாழ்க்கையை இனி விரைவில் பெற்று மகிழ்வோம். தாடகையைக் கொன்ற வெற்றியில் பொருந்திய இராமருக்கு நீங்களும் தெய்வ அஸ்திரங்கள் பல வழங்குவீராக'' என்று தேவர்கள் விசுவாமித்திரரிடம் கூறி பூமழையைப் பொழிந்து இராமருடைய வீரத்தை மெச்சிப் போற்றுகிறார்கள்.

தேவர்கள் அறிவுறுத்தியபடியே விசுவாமித்திரரும் தாம் கற்றுணர்ந்த தெய்வ அஸ்திரங்களை எல்லாம் இராமருக்கு முறைப்படி கற்பிக்கிறார். கம்பர், தம்மை ஆதரித்துப் புரந்த வள்ளல் சடையப்பரின் வாஞ்சைமிக்க சொற்களோடு விஸ்வாமித்திரர் கற்பிக்கும் அத்திர வித்தைகளை உவமையாக்கிக் காட்டும் நற்றமிழ் பாடல் ஒன்று இங்கு நமக்கு விருத்தாக வாய்க்கிறது.

''விண்ணவர் போய பின்றை
விரிந்த பூ மழையி னாலே
தண்எனும் கானம் நீங்கித்
தாங்கரும் தவத்தின மிக்கோன்
மன்னவர் வறுமை நோய்க்கு
மருந்தெனும் சடையன் வெண்ணெய்
அண்ணல்தன் சொல்லே அன்ன
படைக்கலம் அருளி னானே''

சடையப்பர் வாய்மலரும் சொற்களால் மன்னர்களின் வறுமைநோய் கூட பறந்துவிடும் என்று கவிச் சக்கரவர்த்தியான கம்பர் சடையப்ப வள்ளலைப் போற்றி ''மன்னவர் வறுமை நோய்க்கு மருந்தெனும் சடையன் வெண்ணெய் அண்ணல்தன் சொல்'' என்று உவமித்திருக்கும் உவமைநயம் எண்ணி எண்ணி மகிழத்தக்கது.

மன்னர்களினும் மேம்பட்ட சடையப்பரின் செல்வச் சிறப்பைக் காட்டுவதாக உள்ள ஒரு வரலாறும் கூட இங்கே நினையத்தக்கது. பட்டாடை நெய்வதற்குப் புகழ்பெற்ற கலிங்கநாட்டிலிருந்து ஒரு வியாபாரி அழகிய சரிகைப் பூ வேலைப்பாடு கொண்ட இரு வேட்டிகளை விற்பதற்குச் சோழன் குலோத்துங்கனிடம் வந்தான். இழை ஒன்றிற்கு ஆயிரம் பொன் என்று வேட்டிக்கு விலை கூறினான் வியாபாரி. சோழனிடம் அவ்வேட்டிகளை வாங்கும் அளவிற்கு அப்பொழுது நிதிவசதி இருக்கவில்லை. ஆகவே மற்றுமொருமுறை வரும்போது வாங்குவதாக சோழன் கூற ஏமாற்றத்துடன் திரும்பிக் கொண்டிருந்த வியாபாரி வழியில் சடையப்பரைக் கண்டு தம் வருத்தத்தைத் தெரிவித்தான். சடையப்பரும் அவ்வியாபாரியின் மனம் மகிழ இழை ஒன்றுக்கு ஆயிரம் பொன் விலை கொண்ட அவ் வேட்டிகள் இரண்டையும் தாமே வாங்கிக் கொண்டார்.

இழைக்கு ஆயிரம் பொன் விலைகொண்ட அவ் வேட்டிகளில் ஒன்றை அணிந்து கொண்ட சடையப்பர், தம் நண்பரான சோழனைக் கண்டு அளவளாவிவரும் பொருட்டு அவனுடைய அரண்மனைக்கு சென்றார். தம்மால் வாங்கியணிய முடியாத வேட்டியைச் சடையப்பர் அணிந்திருக்கக்கண்டு வியந்தான் சோழன். ''நண்பரே! ஒரு வார காலமாக தாங்கள் இவ்வரண்மனை பக்கமே வரவில்லையே ஏன்?'' என்று மன்னன் விசாரிக்க ''ஆம். மன்னா! தொடையில் சிலந்தி, அதனால் வர இயலவில்லை'' என்று சடையப்பரும் விவரம் தெரிவித்தார். ''சிலந்தி ஆறிவிட்டதா?'' என்று விசாரித்தான் சோழன். ''இன்னும் கொஞ்சம் ஆற வேண்டும்'' என்று சடையப்பர் கூற, ''எங்கே பார்ப்போம்'' என்று சோழன், சிலந்திப் புண்ணைக் காட்டுமாறு கேட்டான். அவையில் பலரும் காணத் தம் வேட்டியைத் தூக்கிக் காட்டுவதை மானக்குறைவு என்று எண்ணிய சடையப்பர் இழையொன்றுக்கு ஆயிரம் பொன் கொடுத்து வாங்கிய வேட்டியைச் சற்றும் தயக்கமின்றித் தொடைப்பக்கமாகக் கிழித்து ''இதோ பாருங்கள்! தொடைப்புண்'' என்று காட்டினார்.

''துடையில் ஒரு சிலந்தி தோற்றுவிக்கப்
பட்டின்
புடவை கிழித்த பெருங்கை''
''விளைவாஞ் சிலந்தியை யாடையைக் கீறி
வெளியிலிட்டும்
வளமான கீர்த்திகொள் வேளாளர் பாண்டிய
மண்டலமே''

என்று திருக்கை வழக்கம் முதலான இலக்கியங்கள் சடையப்பரின் செல்வச் சிறப்பையும் தன்மானச் சிறப்பையும் போற்றிப் புகழ்கின்றன.

இத்தகைய சடையப்பரின் செல்வச் செழிப்பினுக்கு முன் புவியாளும் மன்னர்களும் வறியவர்களே. சடையப்பர் கூறும் சொற்கள் அவர்களின் வறுமை நோய்க்கும் மருந்தாகி அவற்றை விரட்ட வல்லன. அத்தகைய சடையப்பரின் சொற்களோடு உவமை கூறத்தக்கனவாய் விளங்கும் பகைவர்களை விரைந்து விரட்ட வல்ல படைக்கலங்களை விசுவாமித்திரர் இராமருக்குக் கற்பித்தார் என்பதையே மேல் காட்டிய பாடலில் கம்பர் விவரித்திருக்கக் காண்கிறோம். முன் பிறவிகளில் செய்த நல்வினைகள் இப்பிறவியில் நாடிவந்து அருளுவதைப் போலவும் விசுவாமித்திரர் கற்பிக்க தெய்வ அஸ்திரங்கள் இராமரை நாடிவந்து அருள் செய்தன என்றும் கம்பர் பாடியுள்ளார். விசுவாமித்திரர் கற்பித்த தெய்வ அஸ்திரங்களுக்கு உரிய தேவர்கள் எல்லாம் நேரிலே தோன்றி ''அண்ணலே! உம் தம்பி இலக்குவனைப் போலவே நாங்களும் உரிய நேரத்தில் வந்து உமக்கு உதவுவோம்'' என்று கூறி இராமரிடம் விடைபெற்றுச் செல்கின்றனர்.

இதற்குப் பிறகு மூவரும் புறப்பட்டு இரண்டு காததூரம் நடந்து செல்கிறார்கள். அப்போது ஓ என்ற பேரிரைச்சலோடு கௌசிகை நதி சரயு நதியோடு கலப்பதை மூவரும் காண்கிறார்கள். விசுவாமித்திரரும் தம் தங்கை கௌசிகை, நதியாக ஓடிக்கொண்டிருக்கும் வரலாற்றை இராமருக்கு எடுத்துக் கூறுகிறார்.

''பிரம்மனின் புதல்வர் குசன், அக்குசனுக்கும் குசன், குசநாபன், அதூர்த்தன், வசு என்று நான்கு புதல்வர்கள் இருந்தார்கள். இவர்கள் முறையே கௌசாம்பி, மகோதயம், தருமாரண்யம், கிரிவிரயம் ஆகிய நாடுகளை ஆண்டார்கள்.

குசநாபன் கிருதாசி என்ற உத்தமியை மணக்க அவர்களுக்கு நூறு பெண் குழந்தைகள் பிறந்தார்கள். அவர்களின் பேரழகினைக் கண்டு ஆசை கொண்ட வாயு அவர்கள் அனைவரையும் தன்னை மணந்து கொள்ளுமாறு வேண்டினான். ''தம் தந்தை சம்மதித்தால் மணப்போம்'' என்று அவர்கள் கூற, வாயு கோபம் கொண்டு அவர்கள் முதுகெலும்பினை ஒடித்து அனைவரையும் கூனிகள் ஆக்கிவிட்டான். வாயு விளைத்த இவ்விபரீதத்தை அப்பெண்களும் சென்று தந்தை குசநாபனிடம் தெரிவித்தார்கள். குசநாபன் தம் புதல்விகளைத்தேற்றி, அவர்கள் அனைவரையும் சூளி என்ற முனிவரின் புதல்வனான பிரம்மதத்தனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். பிரமதத்தன் கைபட்ட அளவிலேயே அப்பெண்கள் அனைவரும் கூன் நிமிர்ந்து தம் பண்டைய எழிலுருவத்தை பெற்றுவிட்டனர்.

பிறகு குசநாபன் தனக்கு ஆண்மகவு ஒன்று வேண்டுமென்று தவம் செய்து காதி என்பவனைப் பெற்றான். அக்காதிக்குக் கௌசிகன் எனும் ஆண் மகவாகத் தாம் முன் பிறக்க, கௌசிகி எனும்பெண் மகவு பின் பிறந்தாள் என்று விசுவாமித்திரர் கூறியருளுகிறார்.

பிறகு தம் தங்கை கௌசிகி பிருகு முனிவரின் மகன் இருசிகனை மணந்ததாகவும் சிறிது காலமே இருசிகன் கௌசிகையுடன் வாழ்ந்து பிறகு அவள் இறந்து பிரம்மலோகம் சென்றுவிட, கௌசிகையும் அவனைப் பின்தொடர்ந்து செல்ல ''நீ உலகத்தின் துன்பத்தை நீக்கநதியாக மாறி ஓடிக்கொண்டிருப்பாயாக'' என்று இருசிகன் சொல்ல, கணவன் கட்டளைப்படி, தம் தங்கை கௌசிகை, கௌசிகை நதியாக மாறி ஓடிக்கொண்டிருக்கிறாள் என்று கௌசிகரான விசுவாமித்திரர் தம் முன்னோர்கள் வரலாற்றையும், தம் தங்கை கௌசிகையின் வரலாற்றையும் இராமஇலக்வனர்களுக்கு விரிவாகக் கூற, அவர்களும் கௌசிகை நதியைத் தொழுது வணங்குகிறார்கள்.

விசுவாமித்திரர் சரயுவும், கௌசிகையும் கலக்குமிடத்தில் சிறந்திருக்கும் ஒரு சோலையின் கண் இருக்கும் தம் ஆசிரமத்திற்கு இராம இலக்கு வனர்களை அழைத்துச் செல்கிறார். திவ்விய மாக விளங்கும் அவ்விடத்தின் சிறப்பையும் இராமர் வினவ விசுவாமித்திரரும் ''இது தான் சித்தாசிர மம், தங்கள் கணவன்மாரையே தெய்வம் ஆக வணங்கும் கற்புடைய மங்கையர்களின் மனங்களை போல தூய்மையானது. நான்மறைக்கும், தேவர்கள் அறிவிற்கும், பிறருக்கும் எட்டாதவரான திருமால் தங்கி இருந்து மூந்நாளில் தவம் செய்த இடமும் இச்சித்தாசிரமமே. இதைவிட புன்தமான இடம் உலகில் வேறு எதுவுமில்லை'' என்று சித்தாசிர மத்தின் பெருமையைக் கூறி விசுவாமித்திரர் திருமால் அங்குச் செய்த தவவரலாற்றையும் விவரித்துக் கூறுகிறார்.

இரணியனுடைய புதல்வர் பிரகலாதர். பிரக லாதரின் பொருட்டே திருமால் நரசிம்ம அவ தாரம் எடுத்து இரணியனை மாய்த்தார். அத் தகைய பிரகலாதரின் புதல்வரான விரோசனன் புதல்வரே மகாபலிச் சக்கரவர்த்தி. திருமறைக் காட்டுச்சிவாலயத்தில் அணையும் தருவாயில் இருந்த தீபமொன்றில் நெய்யைப் பருகியபோது தீபத்தின் திரியை மூக்கால் தூண்டியது ஒரு எலி. அதனால் தீபம் ஒளிவீசி எரியத்தொடங்கியது. அவ்வெலியே மறுபிறவியில் மூவுலகும் ஆளக்கூடிய மகாபலிச் சக்கரவர்த்தியாகப் பிறக்கும் நல்வரத் தையும் பெற்றது.

''நிறைமறைக்காடு தன்னில் நீண்டெரி தீபம் தன்னை
கறை நிறத்தெலி தன்மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்ட வானுலகமெல்லாம்
குறைவறக் கொடுப்பர்போலும் குறுக்கை வீரட்டனாரே''

என்று திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் எலி மகாபலிச் சக்கரவர்த்தியான இவ் வரலாற்றைப் பாடியுள்ளார்.

''நீளுகின்ற நெய்யருந்த நேர் எலியைமூவுலகும்
ஆளுகின்ற மன்னவனாய் ஆக்கினையே''

என்பது திருவருட்பா.

அரக்கர்களின் வழக்க நெறிப்படியே மகா பலிச் சக்கரவர்த்தியும் இந்திரனுடைய பொன்னு லகையும் ஏனைய உலகங்களையும் தன்வயப்படுத்தி ஆட்சி புரிய, தேவர்கள் சென்று திருமாலிடம் முறையிட்டார்கள். பிரகலாதனின் வழிவரும் மரபி னோரை வதைத்து அழிப்பதில்லை என்று வரம் அளித்திருந்தார் திருமால். அதே நேரத்தில் மகா பலியிடம் இருந்த அமராபதி உரிமையைப் பெற்று இந்திரனை வாழ்வித்தாகவேண்டிய கடமையையும் அவர் மேற்கொள்ள வேண்டி வந்தது.

தேவர்களுக்கு இன்னல் புரிந்தபோதும் மகா பலி, வரையாது வழங்கும் வள்ளலாகவும் திகழ்ந் தான். அப்பொழுது அவன் ஒரு யாகமும் செய்து வந்தான். யார் வந்து என்ன வேண்டியபோதும் அதை வழங்குவதாகவும் மகாபலி அறிவித்திருந் தான். மகாபலியை யாசித்து அவனிடமிருந்து மூவுலகையும் மீட்பது என்று திட்டமிட்ட திருமால் காசிபருக்கும் அதிதிக்கும், மகனாக வாமன மூர்த்தி யாக அவதாரம் செய்தார்.

# வாசகர் எண்ணங்கள்



''அக்டோபர் மாதத் திருக்கோயில் இதழில் ''உழவாரப்பணி புரிதல் உவப்பு'' என்ற தலைப்பில் திரு பி. ஸ்ரீனிவாசன் அவர்கள் எழுதிய கட்டுரை-இல்லை—செயலுரை மிகவும் உருக்கமாகவும் அதே சமயம் ஒவ்வொரு மனிதனும் ஆற்ற வேண்டிய கடமையை நினைவுபடுத்தியது. சமண மதத்தில் தீவிர பற்றுக்கொண்டு பின் ஈசனால் தீராத வயிற்று வலி வரப்பெற்றுப் பின் ஆட்கொள்ளப் பட்டு கங்கைவார் சடையருக்கன்பராகி தமது 80 வயதுக்கு மேலும் உழவாரப்பணி செய்து உய்வு பெற்ற எந்தை திருநாவுக்கரசு சுவாமிகளைப் போல் திரு ஸ்ரீனிவாசன் அவர்களும் மன உறுதி யோடு உடலுறுதியையும் எம்பெருமான் திருவரு ளால் பெற்று உற்சாகமாக பெருமான் உழவாரப் பணிபுரிய சுவாமிமலையிலுறையும் சுப்பிரமண்ய மும் அருள்வான் என்று கூறி அவர்கள் பணி சிறக்க அவர்களைப் பின்பற்றி இதனைக் கண்ணுறும் ஒவ் வொருவரும் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு திரு ஸ்ரீனிவாசன் அவர்கள் எல்லா நலன் களும் பெற்று பல்லாண்டு வாழ பழனிவேலவனைப் பிரார்த்திக்கிறேன்.''

—பிச்சம்மாள்பழனிவேல்
''குமரகம்''
113, சண்முகபுரம்
சென்னை-19.

அன்பார்ந்த டாக்டர் அமிர்தலிங்கம்,

தங்கள் கைவண்ணத்தில் திருக்கோயில்இதழின் கட்டுரைகள் யாவும் சிறப்போடும் பொலிவோடும் வந்துகொண்டிருப்பதற்கு என் மகிழ்ச்சியைத் தெரி வித்துக்கொள்கிறேன். தாங்கள் தொடர்ந்து சிறப்பாகக் கடமையாற்ற என் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

—தி. இராச. கல்யாணசுந்தரம் ஐஏஎஸ் (ஓய்வு)
முன்னாள் ஆணையாளர்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-34.

''காலநுனித்துணர் காசிபன் என்னும்
வாலறிவிற்கதித்தொரு மகவாய்
நீலநிறத்து நெடுந்தகை வந்தோர்
ஆலமர் வித்தின் அருங்குறள் ஆனான்''

யாசிக்கப் போகின்ற ஒருவர் தலைநிமிர்ந்து போக அவருடைய மான உணர்ச்சி இடம் கொடுக் காது. தம்பொருட்டல்லாமல் ஓர் பசுவின் பொருட் டும் யாசிப்பது இழிவினையே தரும் என்பதை வள்ளுவர்

''ஆவிற்கு நீர்என்றிரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில்''

என்று பாடியுள்ளார்.

யாசிக்கும் தொழில், யாசிப்பவன் மானத் தைக் கொள்ளும் வாள் என்பதைப் புகழேந்திப் புலவரும்

''செல்வர் பால் சென்றுஈ
எனக்கென்னும் இம்மாற்றம் கண்டாய்-
தனக்குரிய
தானந் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானந் துடைப்பதோர் வாள்''

என்று பாடியுள்ளார்.

இப்படிப்பட்ட இழிவான யாசித்தல் தொழி லைக் கருதிய காரணத்தினாலேயே நெடிய திருமாலும் மிகக் குள்ளமான வாமன மூர்த்தியாகி மகாபலியிடம் சென்றார். மகாபலியும் வாமன மூர்த்தியை வணங்கி வழிபட்டு வேண்டுவனகேளும் என்றார். வாமனர் ''மூவடி மண் தாரும்'' என்று யாசித்தார். அப்பொழுது மகாபலிச் சக்கரவாத்தி யும் தந்தேன் என்று கூற அவர்தம் குல குருவான சுக்கிராச்சாரியார் மகாபலியைத் தடுத்தார்.

''மகாபலி! அந்தணனாக வந்து யாசிப்பவரை யாரென்று எண்ணினாய்?அவரே மாயவன்; அண்ட மும் யாவும உண்டவராகிய திருமால்; அவர் உனக்குக் கேடு சூழவே குறளனாகி வந்துள்ளார். அவர் யாசிப்பதை நீ தராதே!'' என்று சுக்கிராச் சாரியார் தடுத்தார். அப்பொழுதும் மகாபலி தன கொடைச் செயலைத் தவிர்ந்திட எண்ணிடாதவ ராய் குருநாதரைப் பணிந்து ''குருவே! அஸ்டலட் சுமிக்கும் நாயகனாகிய நாராயணருடைய கரங் கள் யாசித்துக் கீழே இருக்க வழங்கும் என் கை மேலே இருக்கும் ஆனால் எனக்கு இதைவிட பெருமை வேறு என்ன சேரமுடியும்? இவ்வுலகில் வறியவர்களுக்கு வழங்கும் வள்ளல்தன்மை பூண் டோரே வாழ்கின்றவர்கள். கையேந்தி இரப்பவர் கள், உயிரிருந்தும் இறந்தவர்களாகவே கருதப்படு வர். ஆகவே கொடுத்து ''வாழ்கின்றவன்'' என்று வையம் வாழ்த்த வாழவே யான் விழைகிறேன். மேலும் பிறருக்கு உதவும் செயலை யாரும் ஒரு போதும் தடுத்தல் கூடாது. அவ்வாறு கொடை யாளர்களின் கொடைச் செயலை யார் தடுக்கி றார்களோ அவர்கள் உண்ண உணவும் இன்றி, உடுக்க உடையும் இன்றி வருந்திடுவர். ஆகவே கொடுக்கும் என் கொடைச் செயலைத் தடுப்பது குருவே உமக்கு தகுதியுடையசெயல் அன்று'' என்று மகாபலி எடுத்துக் கூறினான்.

''எடுத்தொரு வருக்கொருவர் ஈவதனின்
முன்னம்
தடுப்பது நினக்கு அழகிதோ தகவில் வெள்ளி
கொடுப்பது விலக்கு கொடியோர் தமது
சுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும் இன்றி ஒழியும்
காண்''

## மாதங்களில் சிறந்தது மார்கழி

## மாத இதழ்களில் சிறந்தது "திருக்கோயில்"

குறளனாகி வந்து கொடையில் மேம்பட்டு வாழ்ந்த மகாபலீயின் பெருமைமையை உணர்த்திய வாமன மூர்த்தியை எண்ணும்போது கம்பருக்குக் திருக்குறளைப் பற்றிய நினைவும் வராமல் போகுமோ? ஆகவேதான்,

''கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்
பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்''

என்ற வள்ளுவரின் திருக்குறளையே தம் காவி யத்தில் மேல் காட்டிய பாடலில் பொருத் தமுற எடுத்து ஆண்டிருக்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.


தம் குலகுரு சுக்கிரன் தடுத்தும் கேளாமல் கரகந்ரை மகாபலிகவிழ்த்து வாமன மூர்த்தியின் கையில் தாரை வார்க்கத் தொடங்கினார். அப் பொழுதும் சுக்கிரன் ஒரு வண்டு வடிவம் கொண்டு கரகத்தில் நீர் வரும் வழியை அடைத்தார். வாமனமூர்த்தி தருப்பைப்புல்லால் குத்த அதனால் சுக்கிரன் இரு கண்களும் இழந்து ''கெடுவான் கேடு நினைப்பான்'' என்ற பழமொழிக்கிணங்கவே தண் டனையும் பெற்றார்.


மகாபலி கரகநீரைத் தாரை வார்த்துத் தந்த அளவில் குறளனாக நின்ற வாமனரே திரிவிக்ரம மூர்த்தியாக மண்ணுக்கும் விண்ணுக்குமாக உயர்ந்துவிட்டார். பூவுலகைத் தம் ஓரடியாலும் வானுலகை மற்றுமோர் அடியாலும் அளந்து கொண்டுவிட்டார். மூன்றாவது அடியை எப்படி. அளந்து கொள்வது என்று திரிவிக்கிரமர் வினவ, தமது தலையில் அவ்வடி வைத்து அளந்து கொள்ளு மாறு வேண்டினான் மகாபலி. அவ்விதமே திரி விக்கிரமரும் தம் மூன்றாவது அடியை மகாபலியின் தலைமீது வைத்து அவனை பாதாள உலகத்தில் கொண்டுபோய் சேர்த்தார். இவ்வாறு இந்திரனுக்கு அவனுடைய பொன்னுலகை மீளத்தந்து அருள் புரிந்த வாமனரான திருமால், மகாபலிச்சக்கர வர்த்திக்கும் அடுத்த கல்பத்தில் இந்திரன் ஆகும் வரத்தை அப்பொழுதே அருளினார்.

அத்தகைய வாமனமூர்த்தியாக மகாவிஷ்ணு அவதரித்த இடமே இந்தச் சித்தாசிரமம். இந்தப் புண்ணியமிக்க பிரதேசத்தில்தான் நானும் ஆசிர மம் அமைத்து அதில் இருந்து வருகிறேன். என்னு டைய வேள்விக்கு இடையூறாக அரக்கர்கள் வந்து வேள்வித் தீயில் ஊனையும், உதிரத்தையும் கொட்டி வேதனை செய்கிறார்கள். அதனால் என் தவவேள்வியும் இதுவரை பூர்த்தி ஆகாமல் இருந்து வருகிறது. இப்போது இராமா! நீயே எனக்குத் துணையாக வந்திருக்கிறபடியால் அவர்கள் அழிவதும் என் தவவேள்வி நிறைவேறு வதும் நிச்சயம்'' என்று விசுவாமித்திரர் போற்ற, இராம, இலக்குவனர்களும் மனம்மகிழ்ந்து ''சுவாமி! நீங்கள் வேள்வியைத் தொடங்குங்கள். நாங்கள் அரக்கர்களை வென்று மாய்க்கிறோம்'' என்று உற்சாகமாகக் கூறுகிறார்கள்.


(தொடரும்)

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-6000 034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம். அரசினர் தோட்டம். சென்னை-600002









குடந்தையில் 29-10-88 அன்று ஆலயங்கள் மேம்பாட்டுத் திட்ட நிதி உதவி வழங்கும் விழா நடைபெற்றது. தமிழக அரசின் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ்., அவர்கள் நிதி உதவிகளை வழங்கிச் சிறப்புரையாற்றினார். அறநிலையத்துறையின் ஆணையாளர் திரு வ. இராமதாஸ், ஐ.ஏ.எஸ்., தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மச்சேந்திரநாதன், ஐ.ஏ.எஸ்., இணை ஆணையாளர் திரு இரா. தண்டபாணி, பி.எஸ்.சி., பி.எல்., ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

பதிவு எண். எம் 7039





மேதகு பாரதப் பிரதமர் திருமிகு இராஜீவ் காந்தி அவர்கள் கிருஷ்ணாபுரம் அருள்மிகு வெங்கடாஜலபதி ஆலயத்திற்கு வருகை புரிந்தபோது எடுக்கப் பட்ட படங்கள். இணை ஆணையாளர் திரு இரா. தண்டபாணி, பி.எஸ்சி., பி.எல்., அவர்கள் மேதகு பிரதமரை வரவேற்றார்.